தினமணி

உரச் செலவை குறைக்கும் வழிமுறைகள்

First Published : 30 Aug 2012 12:00:00 AM IST



பரிசோதனைக்காக எடுக்கப்படும் மண்.

சிதம்பரம்: விவசாயத்தில் முக்கிய இடுபொருள்களான விதை, உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள், விவசாயக் கூலி ஆகியவற்றின் விலை, தொடர்ந்து அதிகரித்து வருவதால் விவசாயிகள் பெரும் கவலைக்குள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் மத்திய அரசு உரங்களின் மானிய செலவைக் குறைப்பதற்காக யூரியா தவிர்த்து ஏனைய உரங்களின் விலை கட்டுப்பாட்டை நீக்கியுள்ளது. உர மூட்டையில் குறிப்பிட்டுள்ள எம்ஆர்பி விலைக்கு விற்க வேண்டும் என்ற கட்டுப்பாடு மட்டுமே இருந்து வருகிறது.

இந்த காரணங்களால் சாகுபடி செலவைக் கட்டுப்படுத்தவும், குறைக்கவும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகத்தின் மூலம் உர செலவைக் குறைக்கலாம் என கீழ்கண்ட வழிமுறைகளை கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை வேளாண் உதவி இயக்குநர் எஸ்.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

மண் பரிசோதனை அடிப்படையில் உரம் இடுதல்: ஆண்டுக்கு ஒருமுறை மண் மாதிரி எடுத்து பரிசோதனை செய்து அதன் பரிந்துரையின்படி நேரடி உரங்களாக (தழைச்சத்துக்கு யூரியா, மணிசத்துக்கு சூப்பர் பாஸ்பேட், சாம்பல் சத்துக்கு பொட்டாஷ்) இடுவதன் மூலம் உரச் செலவை கணிசமாக குறைக்கலாம்.

விளை நிலத்தில் வரப்பிலிருந்து 2 மீட்டர் அளவு உட்புறமாக இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். இவ்வாறு நான்கு பாகங்களிலிருந்து நான்கு இடங்களையும் மற்றும் நிலத்தின் மையம் ஆகிய 5 இடங்களைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

மேற்கண்ட இடங்களில் பயிர் மிச்சங்களை அகற்றிவிட்டு மண் வெட்டியால் அரை அடிக்கு மேல் மண்ணை வெட்டி எடுத்துவிட்டு பயிரின் வேர் இருக்கும் இடத்தில் உள்ள மண்ணை சேகரித்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு 5 இடங்களில் சேகரித்த மண்ணை கலந்து அரை கிலோ அளவுக்கு மண் மாதிரி எடுக்க வேண்டும். சேகரித்த மாதிரிக்கு குறியீடு அளித்து மண் ஆயவகத்துக்கு அனுப்ப வேண்டும்.

மண் ஆய்வகத்தில் கார அமிலத்தன்மை, உப்பின் தன்மை, தழை, மணி, சாம்பல் சத்துகளின் அளவு, நுண்ணுரங்களின் அளவு ஆகியவற்றை அறிந்து உரமிடுகையில் உர செலவு குறைவதோடு, பயிர் பாதுகாப்பு மருந்துகளின் செலவும் குறைகிறது.

பசுந்தாள் பயிர்களைப் பயிரிடுதல்: பசுந்தாள் பயிர்களைப் பயிரிட்டு 25 முதல் 35 நாள்களில் மடக்கி உழுவதன் மூலம் நிலத்தின் வலம் அதிகரிக்கிறது. மண்ணின் நுண்ணுயிர்கள் பெருக்கம் அடைகிறது. விளைச்சலும் அதிகரிக்கிறது.

தக்கைப் பூண்டு எனப்படும் டெய்னசா காவாலை எனப்படும் கொளஞ்சி அல்லது நரிப்பயிறு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் விதைத்து 25 முதல் 30 நாள்களில் மடக்கி உழுது பின்னர் ஒருவாரம் கழித்து நடவுப் பணி மேற்கொள்ளலாம்.

நுண்ணுயிர் உரங்கள் உபயோகம்: உயிர் உரங்களைப் பயன்படுத்தியும் உர செலவைக் குறைத்துக் கொள்ள முடியும். தழைச்சத்துகளான அசோஸ்பயிரிலம் ரைசோபியம் நுண்ணுயிர் உரங்களையும், மணிச்சத்து எனப்படும் பாஸ்பரம் சத்திற்கென பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிர் உரங்களையும் பயன்படுத்தலாம்.

ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ அசோஸ்பைரில்லம், ஒரு கிலோ பாஸ்போ பாக்டீரியா உபயோகிக்கலாம். இதை விதை நேர்த்தி, நாற்றங்காலில் இடுதல், நடவு வயலில் இடுதல் ஆகிய மூன்று முறைகளில் உபயோகிக்கலாம்.

நுண்ணுயிர் உரங்கள் வேளாண்மை துறை மூலம் 50 சதவீதம் வரை மானியத்திலும் தேவையான அளவு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

தனியார் நிறுவனங்களும் மேற்கண்ட நுண்ணுயிர் உரங்களை தயாரித்து விநியோக்கின்றனர்.

தழைச்சத்து பிரித்து எடுத்தல்: இந்த நடவடிக்கை கையாளுவதன் மூலம் உர செலவைக் கட்டுபடுத்துவதோடு பயிர் பாதுகாப்பு செலவையும் கட்டுப்படுத்த முடியும். சம்பா பட்ட நெற் பயிருக்கு அடியுரம் இட்டபிறகு 20 நாள்கள் இடைவெளியில் மூன்று முறை தழைச்சத்தை மேல் உரமாக இட வேண்டும்.

ஒருமுறைக்கு 22 கிலோவுக்கு மிகாமல் (10 கிலோ தழைச்சத்து) யூரியா உரத்தைப் பயன்படுத்த வேண்டும். விலைக் குறைவு என்பதால் அதிகமாக யூரியா இடுவதால் பூச்சித் தாக்குதல் கண்டிப்பாக அதிகமாகும்.

அசோலா (தரணி வகை தாவரம்) இடுதல்: நெற்பயிருக்கு அசோலா (ஊங்ழ்ய்) இடுவதன் மூலம் மண் வளம் அதிகரிக்கிறது. களைகள் இயற்கையாக குறைகிறது. விளைச்சல் கூடுகிறது. ரசாயன

உர உபயோகத்தையும் குறைத்துக் கொள்ள முடியும். நடவு வயலில் அசோலாவை விட்டு களை எடுக்கும்போது தண்ணீரை வடிகட்டி மிதித்து விடுகையில் மண்ணுக்கு தழைச்சத்து சேர்ந்து விடுகிறது.

மேற்கண்ட 5 முறைகளையும் பயன்படுத்தி விவசாயிகள் குறைந்த உரச்செலவில் அதிக மகசூலைப் பெற முடியும் என்கிறார் வேளாண் உதவி இயக்குநர் எஸ்.ரமேஷ்.

## இரண்டாவது நாளாக தொடர் மழை

First Published : 30 Aug 2012 03:06:05 AM IST

திருவள்ளூர், ஆக. 29: திருவள்ளூரில் தொடர்ந்து இரண்டாவது நாளாக புதன்கிழமை மாலை மழை பெய்தது.

இம்மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக மாலை வேளையில் மழை பெய்து வருகிறது.

இதனால் நிலத்தடி நீர் மட்டம் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. புதன்கிழமை காலை 8.30 மணி நிலவரத்தின்படி பதிவான மழையளவு (மி.மீ): பள்ளிப்பட்டு- 15, திருத்தணி- 5, திருவள்ளூர்- 17, பூந்தமல்லி- 10, பூண்டி ஏரி- 10.4, ஆர்.கே.பேட்டை- 8, செம்பரம்பாக்கம்- 5.

மொத்தம் 70.4 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

## ஆடுகளை தாக்கும் கொல்லி நோயின் அறிகுறிகள், தடுப்பு முறைகள்

First Published : 30 Aug 2012 12:00:00 AM IST



ஆட்டுக்கொல்லி நோய் ஆடு வளர்ப்போருக்கு அதிகளவில் பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் கொடிய நோயாகும். இந்நோய் மோர்பிலிவைரஸ் எனப்படும் வகையைச் சேர்ந்த வைரஸ் கி

திருவள்ளூர்: ஆடுகளை வளர்ப்போருக்கு ஆட்டுக்கொல்லி நோய் கடும் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது.

கிராமப்புறங்களில் வாழும் ஏழை, எளிய மக்கள் பொருளாதார வளம் காணும் வகையில் விலையில்லா ஆடுகளை வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இதனால் ஆடுகளின் எண்ணிக்கையும் கிராமப்புறங்களில் கணிசமாக அதிகரித்து வருகிறது. இந்நிலையில் ஆடுகளைத் தாக்கும் ஆட்டுக்கொல்லி நோய் அறிகுறிகள், தடுப்பு முறைகள் குறித்து கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு அறிவித்துள்ளது.

ஆட்டுக்கொல்லி நோய் ஆடு வளர்ப்போருக்கு அதிகளவில் பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் கொடிய நோயாகும்.

இந்நோய் மோர்பிலிவைரஸ் எனப்படும் வகையைச் சேர்ந்த வைரஸ் கிருமியால் ஏற்படுகிறது.

நம் நாட்டில் அறவே ஒழிக்கப்பட்டு விட்ட வெக்கை நோய், வைரஸ் கிருமியும் இந்த வகையைச் சேர்ந்ததாகும். இந்நோய் கண்ட ஆடுகளில் வெக்கை நோயைப் போல் கீழ்கண்ட அறிகுறிகள் காணப்படும்.

அறிகுறிகள்: அதிக காய்ச்சல் (41 சென்டிகிரேட்) 2 முதல் 5 நாள்கள் இருக்கும், சோர்வு, தீனி உட்கொள்ளாத தன்மை, மூக்கில் இருந்து சளி வடிந்து உறைந்து இருத்தல், கண்களில் அழுக்கு படிதல், வாயின் உள்புறங்கள் ஈறுகள் மற்றும் நாக்கில் புண் ஏற்பட்டு அதிக உமிழ்நீர் சுரத்தல், கழிச்சல், இருமல், குட்டிகளில் அதிகளவு இறப்பு.

நோய் பரவ சாதகமான சூழ்நிலைகள்: நோயுள்ள இடங்களில் இருந்து ஆடுகள் வாங்கி புதிதாக மந்தையில் சேர்ந்தால் பிற ஆடுகளுக்கு நோய் எளிதில் தொற்றிக் கொள்ளும்.

நோய் கண்ட ஆடுகள் இருமும் போது வெளிப்படும் சளி மற்றும் உமிழ்நீர் ஆகியவை காற்றில் கலந்து மற்ற ஆடுகளில் படும்போது நோய் தொற்றிக் கொள்கிறது.

நோயுற்ற ஆடுகளின் கண் மற்றும் மூக்கில் இருந்து வடியும் நீர், சாணம் மற்றும் சிறுநீர் ஆகியவற்றால் நோய் பரவும், ஆட்டுக் கொட்டில்களில் இந்த வைரஸ் நோய்க்கிருமி 36 மணி நேரம் வரை உயிருடன் இருக்கவல்லது.

நோய் தடுப்பு முறைகள்: நோயினால் தாக்கப்பட்ட ஆடுகளை உடனே அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று உரிய சிகிச்சை அளிக்க வேண்டும்.

ஆட்டுக் கொட்டில்களையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். புதிதாக வாங்கிய ஆடுகளை குறைந்தது இரு வாரங்கள் தனியே வைத்து நோய் எதுவும் இல்லை என உறுதி செய்யப்பட்ட பின்னரே மந்தையில் சேர்க்க வேண்டும்.

பி.பி.ஆர். நோய் வராமல் இருக்க ஆண்டுக்கு ஒருமுறை ஆடுகளுக்கு குறிப்பாக முதல் 6 மாத வயதுக்குட்பட்ட குட்டிகளுக்கு கண்டிப்பாக தடுப்பூசி போட வேண்டும்.

மேலும் விவரங்கள் அறிய மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, திருவள்ளூர் மற்றும் உதவி இயக்குநர் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு, காஞ்சிபுரம், 27235238 என்ற தொலைபேசி எண்ணை அணுகலாம்.

## உணவு ஏற்றுமதியின் தேவை

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 30 Aug 2012 01:30:48 AM IST

2012-13-ஐ முழுமையான வறட்சி என்று மதிப்பிட முடியாது. கரீஃப் பருவ மழை பல மாநிலங்களில் பொய்த்துவிட்டது. தமிழ்நாட்டில் மழை அவ்வளவாகப் பொய்த்துவிடவில்லை. எவ்வகையிலும் தமிழ்நாடு உணவு உற்பத்தியில் உபரி மாநிலம் இல்லை என்பதால் தமிழ்நாடு நிலை இந்திய நிலைக்குப் பொருந்தாது.

இந்தியாவில் தென்மேற்குப் பருவக்காற்று வழங்கிய மழை மே முதல் ஜூலை வரை சராசரி அளவைவிடக் குறைவு. உணவு உற்பத்தியில் உபரி மாநிலங்களான பஞ்சாப், ஹரியாணா, மேற்கு உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், மகாராஷ்டிரம், ராஜஸ்தான், குஜராத்துகளில் வானம் பொய்த்தாலும்கூட 90 சதவீதத்துக்கு மேல் பாசன வசதி உள்ளது.

மத்திய வேளாண்மை அமைச்சகம் வழங்கும் தகவல்கள் அடிப்படையில் கரீஃப் உணவு உற்பத்தியின் பாதிப்பு கவலைப்படக்கூடியதாக இருக்காது என்றே மதிப்பிடப்பட்டுள்ளது.

கொள்முதல் செய்யப்பட்ட அரிசியும் கோதுமையும் குவிந்துள்ளன. கொட்டி வைக்க இடமில்லாமல் பாழாவதற்கு முன் பொது வினியோகத்துக்குரிய தேவையை ஒதுக்கிவிட்டு மிஞ்சுவதை ஏற்றுமதி செய்யலாம் என்ற கருத்து மேலோங்கியுள்ளது.

2012-13 வறட்சி சில மாநிலங்களில் காணப்பட்டாலும் ஏற்றுமதிக்குத் தடை இல்லை என்றும் கூறப்படுகிறது. இது என்ன கணக்கு?

சராசரியைவிடக் குறைவான மழை, உலகின் பல தேசங்களிலும் இந்த ஆண்டு இருந்தது. ரஷியா, உக்ரைன், கஜகஸ்தானில் மிக மோசமான வறட்சியால் கோதுமை, மக்காச்சோளம், சோயா உற்பத்தி 10 கோடி டன் அளவுக்குக் குறைந்துள்ளது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, அர்ஜெண்டினா தேசங்களிலும் கோதுமை உற்பத்தி குறைந்துள்ளது. ஆனால், இந்தியாவில் உணவு உற்பத்தியில் சற்று பாதிப்பு இருந்தாலும், உபரி இருப்பு இன்னமும் தேவைக்கு மேல் உள்ளது.

அரிசியைப் பொருத்தவரை பாசுமதி அல்லாத வெள்ளை அரிசி மத்திய தொகுப்பில் 3.3 கோடி டன் உள்ளது. கரீஃப் பருவத்தில் அரிசி உற்பத்தி சுமார் 8.8 கோடி டன்களைத் தொடும். அரிசி விளையக்கூடிய ஆந்திரப்பிரதேசம், சத்தீஸ்கர், ஒடிசா, கிழக்கு உ.பி. ஆகியவை சராசரி

மழைப்பொழிவைப் பெற்றுள்ளதால் ரபி பருவத்திலிருந்தும் நிறைய உபரி அரிசிபெறும் வாய்ப்புள்ளது.

அரிசியில் இதர உபரி மாநிலங்களில் - குறிப்பாக பஞ்சாப், ஹரியாணா, மேற்கு உத்தரப் பிரதேசம் மாநிலங்களில் உபரி அரிசி 1.4 கோடி டன்கள் வரை எதிர்பார்க்கலாம். மேற்கூறிய மூன்று மாநிலங்களில் 99 சதவீத விளைச்சல் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் பெறப்படுவதால் மழைப்பொழிவு குறைந்தாலும் ரபி அரிசி விளைச்சல் குறையாது என்று வர்த்தக வட்டாரங்கள் கணக்கிட்டுள்ளன.

நெல் அறுவடைப் பருவம் முடிந்து அங்காடி வரத்து இல்லாத காரணத்தால் எப்போதுமே ஆகஸ்ட் முதல் அரிசி விலை ஏறுவதுண்டு. கையில் நல்ல இருப்பு இருந்தும் விலை ஏற்றம் அரிசி அரைவையில் மின்பற்றாக்குறை, பணவீக்கம், பதுக்கல் போன்ற காரணங்களை வைத்து ஏற்றுமதியைத் தடை செய்வது மதியீனம்.

கடந்த 20 ஆண்டுகளில் இந்தியா அரிசியை இறக்குமதி செய்யவே இல்லை. 1990-லிருந்து 2008 வரை பாசுமதியுடன் பாசுமதி அல்லாத வெள்ளை அரிசி ஏற்றுமதியானது. பின்னர் அரிசி ஏற்றுமதி தடை செய்யப்பட்டு 2011-ல் தடை நீக்கப்பட்டதும் பாசுமதி அல்லாத அரிசி 50 லட்சம் டன்கள் ஏற்றுமதியாயின. ஆனால், அரசுத் தரப்புக் கொள்முதல் குவியல் எதுவும் தொடப்படாத தனியார் ஏற்றுமதியே 50 லட்சம் டன்கள். இதில் வெண் புழுங்கல் அரிசி மட்டும் 30 லட்சம் டன்கள்.

கோதுமை விஷயத்தில் இந்திய உபரிநிலை நிறைவுக்குமேல் நிறைவாயுள்ளது. தேவையான உபரி 1.4 கோடி டன்கள். உள்ள உபரியோ 4.6 கோடி டன்கள்.

கோதுமைக் கொள்முதல் விலையை உயர்த்தியதன் பலனாக உற்பத்தியில் உபரி உயர்ந்து வாங்க முடியாத காரணத்தால் உத்தரப் பிரதேச மாநிலத்தில் கோதுமை விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

உபரிகளை உடனுக்குடன் ஏற்றுமதி செய்திருந்தால் இந்த அவல நிலை ஏற்பட்டிருக்குமா? இந்தியக் கோதுமை உற்பத்தி 9.3 கோடி டன்களுடன் இருப்பில் உள்ள 2 கோடி டன் சேர்த்தால் 11.3 கோடி டன் கோதுமை உள்ளது. ஏற்றுமதிக்கு ஒதுக்கப்பட்ட 60 லட்சம் டன்னையும் சேர்த்தால் உள்ளூர் நுகர்வு 8.8 கோடி டன்களே.

இன்னும் நாம் தாராளமாக 1 கோடி டன் வரை உணவுக் கார்ப்பரேஷன் கோதுமையை ஏற்றுமதி செய்யலாம். ஆனால், 50 லட்சம் டன்கள் மட்டுமே ஏற்றுமதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கோதுமையில் தனியார் ஏற்றுமதி 20 லட்சம் டன்கள்.

உணவு ஏற்றுமதி - இறக்குமதி விஷயத்தில்கூட சமன்பாடு எட்டப்படவில்லை. ஏனெனில், இறக்குமதி மதிப்பு கூடுதலாக உள்ளது. வனஸ்பதிக்காகவும் பொது விநியோகத்துக்காகவும் சோயா எண்ணெய் மற்றும் பாமாயில் இறக்குமதி செய்கிறோம்.

சென்ற ஆண்டு 80 லட்சம் டன்கள் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்த நாம் இந்த ஆண்டு 90 முதல் 100 லட்சம் டன்கள் இறக்குமதி செய்து - உள்ளூர் தென்னை - கடலை - எள் - சூரியகாந்தி

விவசாயிகளைக் கொல்லத் திட்டமிட்டுள்ளோம். விவசாயிகளின் உயிர் சல்லிக்காசுக்கு மதிப்பில்லை. ஆனால், நாம் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட சமையல் எண்ணெய் மதிப்பு 10 பில்லியன் டாலர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டால் உலகச் சந்தையில் சோயா எண்ணெய் விலை 2 பங்கு உயர்ந்துள்ளதால் நாம் வழங்க வேண்டிய அன்னியச் செலாவணி உயர்ந்துவிட்டது. ரூபாய் மதிப்பு குறைந்துவிட்டதால் இறக்குமதிச் சுமை கூடி வருகிறது.

மேலும் 40 லட்சம் டன்கள் பருப்பு இறக்குமதி மதிப்பு 2.50 பில்லியன் டாலரையும் கூட்டினால் 12.5 பில்லியன் டாலரைச் சமப்படுத்த கோதுமை, அரிசி, சர்க்கரை, மக்காச்சோளம், பிண்ணாக்கு ஏற்றுமதிகொண்டு ஈடு செய்கிறோம்.

இதுவரை அனுமதிக்கப்பட்ட உணவு ஏற்றுமதி மதிப்பு 12.1 பில்லியன் டாலர். அரிசி ஏற்றுமதியில் 20 லட்சம் டன் பாசுமதியுடன் 50 லட்சம் டன் சாதா அரிசியின் மதிப்பு 4 பில்லியன் டாலர். கோதுமை 70 லட்சம் டன் மதிப்பு 2.1 பில்லியன் டாலர். மக்காச்சோளம் 20 லட்சம் டன் = 0.6 பில்லியன் டாலர். சீனி 40 லட்சம் டன் = 2.40 பில்லியன் டாலர். எண்ணெயெடுத்த புரதப் பிண்ணாக்கு 60 லட்சம் டன்கள் = 3 பில்லியன் டாலர். அப்படியும் ஏற்றுமதிப் பற்றாக்குறை 4 பில்லியன் டாலர்.

அனைத்துலகுச் சந்தைகளில் எந்த உணவுப் பொருளும் விலை இறங்கியதாகத் தெரியவில்லை. நம்மிடமுள்ள உபரி கோதுமையில் மேலும் 50 லட்சம் டன்கள் ஏற்றுமதியானால் வர்த்தகப் பற்றாக்குறையை ஈடுசெய்து அன்னியச் செலாவணியை உயர வைக்கலாம்.

இதெல்லாம் நடக்கிற காரியம் இல்லை. நம்மிடம் உணவுக் கார்ப்பரேஷன் தவிர, மாநில சிவில் சப்ளை கார்ப்பரேஷன் என்று அரிசி - கோதுமை வர்த்தகத்துக்கான பெரிய கட்டமைப்பு இருந்தாலும் அதைச் சரியாகப் பயன்படுத்த விரும்பாத அரசு, வால்மார்ட், கார்கில், மெட்ரோ ஏ.ஜி., மான்சாண்டோ போன்ற பகாசூரர்கள் வசம் இந்திய விவசாய - உணவு வர்த்தகத்தை ஒப்படைக்கத் தயாராகிவிட்டது.

விவசாயம், உணவு, அன்னிய வர்த்தகம், நிதி ஆகிய துறைசார்ந்த அமைச்சர்கள் ஒன்றுகூடித் திட்டமிட்டு வேளாண் - உணவு ஏற்றுமதிக்குரிய உருப்படியான திட்டம் தயாரித்துச் செயல்பட்டால் நாடு உருப்படும்.

கோதுமை, கரும்பு, தென்னை, பருத்தி விவசாயிகள் விலையில்லாமல் தற்கொலை செய்துகொள்ளும் செய்திகளுடன் கொத்தவரை சாகுபடி செய்த ராஜஸ்தான் விவசாயிகளில் சிலர் கோமான்களாகியுள்ள செய்தியும் உள்ளது.

வெறும் துவரை போட்டால் கிலோவுக்கு ரூ. 40 கிட்டலாம். ஆனால், கொத்தவரையாகப் போட்டால் பருப்புக்கு கிலோ ரூ. 400-க்கு விற்கலாம்.

கொத்தவரை விதையில் உள்ள பிசின் அமெரிக்கா - சீனாவில் ஷேர் கேஸ் (இயற்கை எரிவாயு) தொழிலுக்கு உதவுகிறதாம்.

கொத்தவரைப் பிசின் (0.5) + மணல் (5) + தண்ணீர் (94.5) கலந்த நீரை உயர் அழுத்த விசையில் அடிமட்டப் பாறைகளில் செலுத்தும்போது பாறை உடைந்து எரிவாயு கிட்ட ஏதுவாகிறதாம். 1 டன் விதையில் 300 கிராம் பிசின் எடுக்கலாம். 1 டன் பிசின் ரூ. 15,000.

2011-12-ல் கொத்தவரைப் பிசின் ஏற்றுமதி ரூ. 5,000 கோடி அள்ளித் தருமாம். விதையை எடுத்த செடி மாட்டுத்தீவனமாகப் பயனாகிறது. இதெல்லாம் அரசு முயற்சி இல்லை, விவசாயிகளின் முயற்சிதான்.

"வாழ நினைத்தால் வாழலாம்' என்ற அடிப்படையில் ஏற்றுமதியைக் குறிவைத்து இந்திய விவசாயிகள் செயல்பட்டால் பிழைக்கலாம். அதே சமயம் ஏற்றுமதி இடைத்தரகர்களின் மாயவலைகளில் சிக்காமல் தப்பும் வழியைக் கடைப்பிடிக்க உணவு - விவசாய விளைபொருள் ஏற்றுமதிக்கென்று தனிப்பட்ட விவசாயக் கூட்டுறவு அமைப்புகளைத் தொடங்கி மதிப்பூட்டப்பட்ட பொருளாக ஏற்றுமதியுடன் உள்ளூர் விற்பனையையும் செய்ய முயற்சிக்கலாம்.

நெல்லாக விற்காமல் அரிசியாகவோ, அவலாகவோ, பொரியாகவோ விற்கலாம். கோதுமையை மாவாக்கி விற்கலாம். புஞ்சைத் தானியங்களை உமி நீக்கி மாவாக்கியோ, மால்ட் வடிவிலோ விற்கலாம். தக்காளியை கெச்சப்பாக மாற்றி விற்கலாம். வெங்காயத்தை வடாமாக மாற்றி விற்கலாம்.


முயன்றால் இயற்கை விவசாயம்செய்து நஞ்சல்லா உணவை - குறிப்பாக மாங்கனி, திராட்சை, நெல்லி, எலுமிச்சை, நன்னாரிப் பழரசங்களுக்கு உள்ளூரிலும் நல்ல விலை உண்டு. ஏற்றுமதியும் செய்யலாம்.

விவசாய விளைபொருள் மூலம் நாட்டின் ஜி.டி.பி. மதிப்பை உயர்த்த அரசின் ஆதரவு தேவைப்படுகிறது. விவசாய இறக்குமதிகளைத் தவிர்த்து ஏற்றுமதியை உயர்த்தப் புது நடவடிக்கைகள் தேவை. நாணயச் செலாவணியில் வர்த்தகச் சமன்பாட்டைக் குலைப்பது இரண்டு வகை எண்ணெய்கள்.

முதலாவதாகக் கச்சா எண்ணெய் (பெட்ரோல்) இரண்டாவதாக சமையல் எண்ணெய் (பாமாயில்). இந்த இரண்டுக்கும் மாற்று உள்ளது. பெட்ரோல் இறக்குமதியைத் தவிர்க்க எத்தனால் உதவலாம். கரும்பிலிருந்து வெல்லம் - எத்தனால் தயாரிக்கும் உரிமத்தை விவசாயக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கி எத்தனாலைப் பெட்ரோலாகப் பயன்படுத்தும் ஒரு மாற்று ஏற்பாடு மூலம் அன்னியச் செலாவணியும் மிச்சமாகும் மாசுக்கட்டுப்பாடும் குறையும்.

அதேபோல் மனித உடலுக்கு நன்மை செய்யும் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய்களை மட்டுமே ரேஷன் கடைகளில் வழங்க வேண்டும். அதற்கான கொள்முதல் நிகழ்ந்தால் உள்ளூர் விவசாயிகள் பிழைப்பார்கள். அதைவிட்டு உடலுக்குத் தீமையளிக்கும் பாமாயிலையும், சோயா எண்ணெயையும் கூடுதலாக இறக்குமதி செய்வதை நிறுத்தினால் அன்னியச் செலவாணியும் மிச்சமாவதுடன், புற்றுநோய்ப் பரவலையும் தடுக்கலாம். விவசாயம் எழுச்சிபெற ஒழுங்குமுறையான வேளாண் ஏற்றுமதி தேவைதான்.

மேட்டூர் அணை நீர் வரத்து அதிகரிப்பு
First Published : 30 Aug 2012 02:07:05 AM IST



மேட்டூர், ஆக. 29: மேட்டூர் அணைக்கு நீர் வரத்து மேலும் அதிகரித்துள்ளது. காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாள்களாகப் பரவலாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடந்த 26-ம் தேதி நீர் வரத்து 1,192 கன அடியாக இருந்தது. இது 27-ம் தேதி மாலை 1,549 கன அடியாக உயர்ந்து, புதன்கிழமை மாலை 3,518 கன அடியாக அதிகரித்துள்ளது. நீர் வரத்தைவிட குடிநீர் தேவைக்கு திறக்கப்படும் நீரின் அளவு குறைவாக இருப்பதால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் மெல்ல உயரத் தொடங்கியுள்ளது.

நீர் வரத்து அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். புதன்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 76.42 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 3,518 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. குடிநீர் தேவைக்கு விநாடிக்கு 2,002 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. நீர் இருப்பு 38.48 டி.எம்.சி.யாக இருந்தது.

விவசாயிகளுக்கு மக்காச்சோள ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி
First Published : 30 Aug 2012 09:22:29 AM IST

திண்டுக்கல், ஆக. 29: திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் வட்டம் வடமதுரை வட்டார வேளாண் அலுவலகம் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் வாகரையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக மக்காச்சோள ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளு0ல்க்கு ஒருநாள் பயிற்சி வழங்கப்பட்டது.

மக்காச்சோளத்தின் முக்கியத்துவம் குறித்து ஆராய்ச்சி நிலையத் தலைவர் ரவிசேகரன், இணை பேராசிரியர் சேதுராமன் மக்காச்சோளத்தின் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை பற்றியும், உதவி பேராசிரியர் ரஞ்சினிமாலா மக்காச்சோள பயிர் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் குறித்தும் சுகன்யா கண்ணன் பூச்சிகள் அதன் கட்டுப்பாடு முறை குறித்தும் பயிற்சி அளித்தனர். ஏற்பாடுகளை, வடமதுரை வட்டார வேளாண் உதவி இயக்குநர் ராணி, அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் எஸ்.பாஸ்கர், தொழில்நுட்ப வல்லுநர்கள் உதயகுமார், ராதாகிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் 76.42 அடி ஆனது
First Published : 29 Aug 2012 04:27:42 PM IST
Last Updated : 29 Aug 2012 11:11:02 PM IST

சேலம், ஆக., 29 : மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 76.42 அடியாக உள்ளது. மேட்டூர் அணைக்கு விநாடிக்கு 3,518 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. மேட்டூர் அணையில் இருந்து 2,002 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. மேட்டூர் அணையின் தற்போதைய நீர் இருப்பு 38.48 டிஎம்சியாகும்.

## விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்
First Published : 29 Aug 2012 10:42:53 AM IST

உளுந்தூர்பேட்டை, ஆக. 28: உளுந்தூர்பேட்டை துணை மின் நிலையத்தில் உள்ள கோட்ட மின்வாரிய அலுவலகத்தில் விவசாயிகள் குறை கேட்பு கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மேற்பார்வைப் பொறியாளர் பெருமாள் தலைமை வகித்தார். உளுந்தூர்பேட்டை கோட்ட செயற்பொறியாளர் அமலோற்பவநாதன் முன்னிலை வகித்தார். இதில் விவசாயிகள் பலர் தங்கள் புகார்களைத் தெரிவித்தனர்.

÷உதவி செயற்பொறியாளர்கள் சாமிநாதன், ரகுராமன் மற்றும் உளுந்தூர்பேட்டை, சேந்தநாடு, எறையூர், பிள்ளையார்குப்பம், ஆசனூர் ஆகிய துணை மின் நிலையங்களைச் சேர்ந்த மின் வாரிய இள மின்பொறியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## முட்டை கொள்முதல் விலை வரலாறு காணாத உயர்வு
First Published : 29 Aug 2012 12:52:59 PM IST

நாமக்கல், ஆக.28: நாமக்கல் மண்டலத்திலேயே வரலாறு காணாத அளவில் முட்டை கொள்முதல் விலை உயர்ந்துள்ளது. செவ்வாய்க்கிழமை 3 காசுகள் உயர்த்தப்பட்டு, முட்டை விலை ரூ.3.34ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வட மாநிலங்களில் கொண்டாடப்படும் பண்டிகை முடிந்ததாலும், ஆடி மாதம் முடிந்ததை அடுத்தும் முட்டை நுகர்வு பெருமளவில் உயர்ந்து வருகிறது. இதற்கிடையே, தீவன விலையும் கடுமையாக உயர்ந்து வருவதை அடுத்து, நாமக்கல்லில் முட்டை பண்ணைக் கொள்முதல் விலை தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது.

அதன்படி, ஜூலை 14-ம் தேதி ரூ.2.70ஆக இருந்த முட்டை விலை, ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில் ரூ.2.80ஆக உயர்ந்தது. தொடர்ந்து, ஆக. 10-ல் ரூ.3.04, ஆக. 20-ல் ரூ.3.11, ஆக. 22-ல் ரூ.3.31 என உயர்ந்தது.

இந்த நிலையில், மேலும் 3 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.3.34 ஆக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

## குன்றக்குடி வேளாண் அறிவியல் மையத்தில் பி.டி. பருத்தி சாகுபடி பற்றிய இலவச பயிற்சி

First Published : 29 Aug 2012 03:33:19 PM IST

காரைக்குடி, ஆக. 28: குன்றக்குடியில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண் அறிவியல் மையத்தில், பி.டி. பருத்தி சாகுபடி பற்றிய இலவசப்பயிற்சி செவ்வாய்க்கிழமை(ஆக. 28) நடைபெறவுள்ளதாக வேளாண் அறிவியல் மையத்தின் தலைவர் வி. பழனிச்சாமி தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் கூறியது: தற்போது நிலவி வரும் தட்பவெட்ப நிலை, கிடைக்கக் கூடிய மழை அளவுகளைப் பொறுத்து மானாவரியில் பி.டி., பருத்தி சாகுபடி செய்ய இந்த இலவசப் பயிற்சி நடைபெறுகிறது.

இதில் பூச்சியியல்துறை உதவிப் பேராசிரியர் சி. சங்கர், பி.டி. பருத்தி சாகுபடிக்கான நிலத் தேர்வு, வீரிய ஓட்டுரக பருத்தி, நீண்ட இலைப் பருத்தி, விதைப்பு முறை, உரம் மேலாண்மை, நுண்ணூட்ட மேலாண்மை, பயிர் பாதுகாப்பு முறை, அறுவடை இயந்திரம் மற்றும் சந்தைப் படுத்துதல் உள்ளிட்ட பயிற்சிகளை நடத்துகிறார்.

இலவசமாக நடைபெறும் இப்பயிற்சி காலை 10 மணிக்கு தொடங்குகிறது. சிவகங்கை மாவட்ட விவசாயிகள் இதில் கலந்துகொண்டு பயிற்சி பெற்று பருத்தி சாகுபடி செய்தால், ஏக்கருக்கு 10 முதல் 15 குவிண்டால் மகசூல் எடுத்து லாபம் ஈட்டமுடியும்.

மேலும் விவரங்கள் அறிந்துகொள்ள குன்றக்குடி வேளாண் அறிவியல் மையத் தொலைபேசி: 04577-264288 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

## டெல்டா பகுதியை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வலியுறுத்தல்

First Published : 29 Aug 2012 02:50:00 PM IST

தஞ்சாவூர், ஆக. 28: டெல்டா பகுதியை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்றார் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எம்.ஆர். சிவசாமி.

இதுகுறித்து அவர் தஞ்சாவூரில் செவ்வாய்க்கிழமை தெரிவித்தது:

சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணை செப்டம்பர் 17-ம் தேதி திறக்கப்படும் எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது. சம்பா சாகுபடிக்குப் பொதுவாக ஆகஸ்ட் 15-ம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படும். செப்டம்பர் 15-ம் தேதிக்குள் நடவுப் பணிகள் முடிக்கப்படும்.நிகழாண்டு செப்டம்பர் 17-ம் தேதி திறக்கப்படுவதால் நடவுப்பணி மேலும் ஒரு மாத காலம் தாமதம் ஏற்படும். மேலும், அக்டோபர் மாதத்தில் பெய்யும் மழையால் பயிர்கள் சேதமடையும். எனவே, செப்டம்பர் மாதத்தில் தண்ணீர் திறப்பதால் சம்பா சாகுபடிக்குப் பயன் ஏற்படாது.

சம்பா சாகுபடிக்காக 14 அம்சத் திட்டங்களைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. இதற்கு டிராக்டர், நடவு இயந்திரங்கள் ஏராளமாகத் தேவைப்படும். அந்த அளவுக்கு இயந்திரங்களைக் கொடுக்க இயலாது. சமுதாய நாற்றங்கால் அமைப்பதற்குத் தேவையான அளவு நிலம் கொடுப்பதிலும் சிக்கல் ஏற்படும். நேரடி விதைப்பு திட்டம் திருவாரூர் மாவட்டத்தில் சில பகுதிகளுக்குப் பொருந்தும். மற்ற பகுதிகளுக்குப் பொருந்தாது. மேலும், இந்தத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியும் மிகக் குறைவாக இருக்கிறது. இன்னும் அதிகமாக ஒதுக்கினால்தான் ஓரளவுக்குப் பயன்படும்.இந்தச் சூழ்நிலையில் சம்பா சாகுபடி செய்தால் பெருத்த நஷ்டம்தான் ஏற்படும். நிகழாண்டில் சம்பா சாகுபடிக்கு சாத்தியமில்லை. எனவே, டெல்டா பகுதியை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, ஏக்கருக்கு ரூ. 10,000 வீதம் வறட்சி நிவாரணம் அறிவிக்க வேண்டும். விவசாயிகளின் அனைத்து தேசிய வங்கிக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றார் சிவசாமி. முன்னதாக, அவரது தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டத் தலைவர் ஆர். சுகுமாரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தருமபுரியில் ஆக. 31-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 28 Aug 2012 12:29:36 PM IST

தருமபுரி, ஆக. 27: தருமபுரி மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் இந்த மாதம் 31-ம் தேதி நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் ஆர்.லில்லி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தருமபுரி, மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் வருகிற 31-ம் தேதி (வெள்ளிக்கிழமை) முற்பகல் 11.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் ஆர்.லில்லி தலைமையில் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று விவசாயம் சம்பந்தமான தங்களது குறைகளையும், கருத்துக்களையும் தெரிவித்து பயனடையும்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**வேளாண் கூட்டுறவு சங்கத்துக்கு நிலக்கடலை வரத்து அதிகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2012,02:23 IST

சேலம்: சேலம், லீபஜார் பகுதியில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் மற்றும் நிலக்கடலை ஏலம் நடக்கும். மழை இல்லாததால், இரண்டு மாதமாக நிலக்கடலை வரத்து குறைவாக இருந்தது. விவசாயிகள் எதிர்பார்த்த விலையும் கிடைக்கவில்லை. இந்நிலையில், கூட்டுறவு சங்கத்துக்கு, நிலக்கடலை வரத்து நேற்று முன்தினம் அதிகரித்திருந்தது.இது குறித்து, துணைப்பதிவாளர் முத்துராஜ் கூறியதாவது:நேற்று நடந்த ஏலத்துக்கு, 1,500 மூட்டை மஞ்சள் வரத்தானது. குண்டு மஞ்சள் குவிண்டால், 6,719 ரூபாய்க்கு விற்பனையானது. விரலி மஞ்சள், 8,100 ரூபாய்க்கு விற்பனையானது. பனங்காலி மஞ்சள், 12 ஆயிரத்து, 800 ரூபாய்க்கு விற்பனையானது. மொத்தம், 60 லட்சம் ரூபாய் மதிப்புக்கு மஞ்சள் விற்பனை நடந்தது.சமீபத்தில் பெய்த மழையால், நிலக்கடலை வரத்து அதிகரித்துள்ளது. விவசாயிகள் எதிர்பார்த்த விலையும் கிடைத்துள்ளது. நேற்று முன்தினம், 300 மூட்டை நிலக்கடலை வரத்தானது. 60 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை நிலக்கடலை, குறைந்தபட்சம், 1,701 முதல், அதிகபட்சம், 2,820 ரூபாய் வரை விற்பனையானது. மொத்தம், ஆறு லட்சம் ரூபாய்க்கு நிலக்கடலை விற்பனையானது. இவ்வாறு கூறினார்.

**கோடையில் குடிநீர் தட்டுப்பாடு அபாயம் :ஏமாற்றியது பருவமழை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2012,01:18 IST

கூடலூர் : கூடலூர் பகுதியில் பருவமழை பொய்த்து, பாண்டியார் - பொன்னம்புழா ஆற்றில் நீர் வரத்து குறைந்துள்ளது; இதனால்,கோடைகாலத்தில் கடும் தண்ணீர் தட்டுபாடு நிலவும் சூழல் ஏற்பட்டுள்ளது.கூடலூர் மற்றும் இந்தியாவில் அதிக மழை பெய்யும் "இரண்டாவது சிரபூஞ்சி' யானதேவாலாவில், ஜூன் முதல் வாரத்தில், பருவ மழை துவங்கி விடும். தொடர்ச்சியாக பெய்யும் மழையின்போது, நீர் நிலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். கூடலூரில் உற்பத்தியாகி, கேரளா சாலியார் ஆற்றில் கலக்கும் பாண்டியார் - பொன்னம்புழா ஆற்றில், ஜூலை- ஆகஸ்ட் மாதத்தில் வெள்ளம் கரைபுரண்டு ஓடும். ஆற்றில் ஆண்டு முழுவதும் தண்ணீர் இருப்பதால்,

முதுமலை உள்ளிட்ட பிற வனப் பகுதிகளில் இருந்து கோடையில் தண்ணீர் மற்றும் உணவு தேடி, யானைகள் அதிகளவில் வந்து செல்லும். கடந்த சில ஆண்டுகளாக தொடரும் இயற்கை அழிவால், பருவமழை காலம் தவறி பெய்வதுடன், ஆண்டுக்கு ஆண்டு மழையின் அளவு குறைந்து வருகிறது. இதன் பாதிப்பால், பல நீரோடைகள் கோடையில் வறண்ட கால்வாயாக மாறி வருகின்றன. இந்த ஆண்டு, இதுவரை இல்லாத வகையில் பருவமழை வெகுவாக குறைந்துவிட்டது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பெய்த தொடர் மழையினால், நீரோடைகளில் தண்ணீர் அதிகளவில் காணப்பட்டது. அப்போது நாடுகாணி பகுதியில், சாலையில் பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டு, இரண்டு நாட்கள் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டு பருவ மழை துவங்கி மூன்று மாதம் ஆகியும், போதிய மழை பெய்யாததால் நீர் நிலைகளில் தண்ணீர் வரத்து வெகுவாக குறைந்து விட்டது. இதனால், நெல் விவசாயம் பாதிக்கும் அபாயம் உள்ளது. பருவ மழை குறைந்துள்ளதால், அடுத்த ஆண்டு கோடையில் மக்களுக்கும்; வன விலங்குகளுக்கும் கடும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், வன விலங்குகள் அதிகளவில் குடியிருப்பு பகுதிகளுக்கு புகுந்து, யானை - மனித மோதல்களாக மாறவும் வாய்ப்புள்ளது. எனவே, இப்பகுதியில் இயற்கையை பாதுகாக்கவும், நீர் நிலைகளை சர்வே செய்து அதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, நீர் ஆதாரங்களை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டியது, மிகவும் அவசியமாகும்.

**விதை உற்பத்தியாளருக்கு தொழில்நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2012,02:54 IST

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூரில் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சி வேளாண்மை துறையினரால் வழங்கப்பட்டது. மண்ணச்சநல்லூர் யூனியன் தலைவர் பரமேஸ்வரி தலைமை வகித்தார். திருச்சி விதைச்சான்று அலுவலர் ரவி பயிற்சியை துவக்கி வைத்தார். மண்ணச்சநல்லூர் வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயபாலன் அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து விளக்கினார். விதை சான்றிளிப்பு துறை அலுவலர்கள் ஜெயராணி, ரங்கராஜன், மனோகரன் விதைப்பண்ணை பதிவு, வயல் ஆய்வு, சான்றிளிப்பு பணிகள் பற்றி விளக்கினர். 50 விவசாயிகள் பங்கேற்றனர். துணை வேளாண்மை அலுவலர் வேலாயுதம் நன்றி கூறினார். உதவி விதை அலுவலர் மருத்துரை, உதவி வேளாண்மை அலுவலர்கள் துரைசங்கர், லட்சுமணன், ஜீவானந்தம் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**காரீப், சம்பா சாகுபடி ஏற்பாடுகள் தயார்: கரூர் கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2012,04:55 IST

கருத்தை பதிவு செய்ய

கரூர்: "கரூர் மாவட்டத்தில் நடப்பு காரீப் மற்றும் எதிர்வரும் சம்பா சாகுபடிக்காக வேளாண்மைத்துறை மூலம் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது' என, கலெக்டர்தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை:கரூர் மாவட்டத்துக்கு காரீப் மற்றும் சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள், தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் போதுமான அளவு இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின்படி, கரூர் மாவட்டத்துக்குரிய உர ஒதுக்கீடு போதுமான அளவு கேட்டு பெறப்பட்டு வருகிறது.தனியார் மொத்த உர விற்பனையாளர்கள், கரூர் மாவட்டத்தை தவிர, பிற மாவட்டங்களில் உரங்களை விற்பனை செய்ய தடை செய்யப்பட்டுள்ளது. உரச்சத்து அடிப்படையிலான மானியம் வழங்கி வருவதால், அதிகபட்ச விற்பனை வி லை என்பது தற்போது கிடையாது. உரம் வாங்கும் விவசாயிகள், உரிய பில்லையும் கேட்டு பெறவேண்டும். அதிக விலைக்கு உரங்கள் விற்றால் உரக் கட்டுப்பாட்டு சட்டத்தின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். உர விற்பனை நிலையத்தில் தெளிவான தகவல் பலகை, விலைப்பட்டியல் போன்றவை இருக்க வேண்டும்.உரவிற்பனை மற்றும் உரம் நகர்தல் குறித்து விளக்கம் பெற, கரூர் வட்டார அலுவலகம் 04324 - 220299, தாந்தோணி 04324 - 255225, அரவக்குறிச்சி 04324 - 231299, க.பரமத்தி 04324 - 283299, குளித்தலை 04323 - 222101, தோகமலை 04323 - 252806, கடவூர் 04323 - 251252, கிருஷ்ணராயபுரம் 04323 - 243342 ஆகிய டெலிஃபோன் எண்களில் விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம்.

**தஞ்சையில் திடீர் மழை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2012,04:12 IST

கருத்தை பதிவு செய்ய

தஞ்சாவூர்: தஞ்சையில் நேற்று மாலையில் திடீரென மழை பெய்து, இதமான சூழ்நிலை நிலவிச்சியதால் நகர மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

தஞ்சையில் நேற்று மாலை ஐந்து மணியளவில் வானம் இருண்டு மேகமூட்டமாக காட்சியளித்தது. இதையடுத்து பகலில் இருந்த வெப்பம் முழுவதும் தணிந்து குளிர்ச்சியான காற்று வீசியது. தொடர்ந்து 5.30 மணிக்கு லேசான மழை பெய்தது. இதனால் நகர மக்கள் சில தினங்களுக்கு பின்,

மீண்டும் இதமான சூழலை அனுபவித்தனர். தஞ்சையில் திடீர் மழையால் இரவும் வெப்பம் தணிந்ததால், நகர மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

**சம்பா சாகுபடி சிறப்பு திட்டத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு: விவசாய சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2012,04:12 IST

கருத்தை பதிவு செய்ய

தஞ்சாவூர்: "காவிரி டெல்டா பாசன மாவட்டங்களில் சம்பா பயிர் சாகுபடிக்காக தமிழக முதல்வர் அறிவித்துள்ள சிறப்பு திட்டத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்' என, தமிழக அரசை தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

காவிரி டெல்டா பாசனத்தின் தற்போதைய நிலைமை குறித்து தமிழக விவசாயிகள் சங்கத்தலைவர் சிவசாமி தலைமையில் தஞ்சையில் ஆலோசனைக்கூட்டம் நடந்தது. இதில் தஞ்சை மாவட்டத்தலைவர் சுகுமாறன், நிர்வாகிகள் ஒன்றிய செயலாளர் புகழேந்தி, ஒன்றிய தலைவர் ஜானகிராமன் உள்பட பலர் பங்கேற்றனர்.கூட்டத்துக்கு பின் தமிழக விவசாயிகள் சங்கத்தலைவர் சிவசாமி கூறியதாவது: தமிழகத்திலுள்ள காவிரி டெல்டா பாசன பகுதிகளில் மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்க முடியாததால் சாகுபடி பணி பெருமளவு பாதித்துள்ளது. விவசாயிகள் பெரிதும் நஷ்டமடைந்துள்ளனர்.சம்பா சாகுபடிக்கு செப்டம்பர் 17ல் மேட்டூர் அணை திறக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த சாகுபடிக்கு பொதுவாக ஆகஸ்ட் 15ல் தான் தண்ணீர் திறக்கப்படும். இதன்மூலம் உழவுப்பணி நடந்து, செப்டம்பர் 15ம் தேதிக்குள் நடவுப்பணி நடத்தப்படும். ஆனால், நடப்பாண்டு செப்., 17ல் மேட்டூர் அணை திறப்பதால் மேலும் ஒரு மாத காலம் தாமதம் ஏற்படும்.

அக்டோபர் மாத மழைக்காலத்தில் பயிர்கள் முழுவதும் சேதம் ஏற்படும். அதனால் செப்டம்பர் மாதத்தில் தண்ணீர் திறப்பால் பயன் ஏதுமில்லை. சம்பா சாகுபடிக்கு தமிழக அரசு 14 அம்ச சிறப்பு திட்டத்தை அறிவித்துள்ளது. இதன்படி சமுதாய நாற்றங்கால் அமைக்க தேவையான நிலம் கொடுப்பதில் சிக்கல் ஏற்படும். நேரடி விதைப்பு திட்டம் திருவாரூர் மாவட்டத்துக்கும் சில பகுதிகளுக்கும் தான் பொருந்தும். மற்ற மாவட்டங்களுக்கு பொருந்தாது.தற்போது சிறப்பு திட்டத்துக்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ள 53 கோடி ரூபாய் நிதி போதாது. மேலும் கூடுதலாக ஒதுக்க வேண்டும் என, அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம். நடப்பாண்டு சம்பா சாகுபடியிலும் நஷ்டம் ஏற்படும் என்பதால், உடனடியாக டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அறிவித்து, நிவாரணப்பணிகளையும், உதவிகளையும் முதல்வர் ஜெயலலிதா முடுக்கி விட வேண்டும். தற்போதைய இக்கட்டான சூழலை கருத்தில்கொண்டு, விவசாயிகளின் தேசிய வங்கி கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## உரங்களை அதிக விலைக்கு விற்றால் நடவடிக்கை

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2012,01:23 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டுக்கல்:உரங்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் மீது விவசாயிகள் புகார் தெரிவிக்கலாம், என, வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார், தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது: உரவிற்பனையாளர்கள் அனைவரும் விலைப்பட்டியல், இருப்பு விபரம் போன்றவற்றை விற்பனை நிலையம் முன் பட்டியலிடவேண்டும். வட்டார ஆய்வாளர்களின் தொலைபேசி எண்கள் விபரங்களை அறிவிப்பு பலகையில் எழுதவேண்டும். உரம் விற்பனை செய்யும் போது உரப்பட்டியல்களில் விவசாயிகளிடம் கையொப்பம் பெற்று பட்டியல் வழங்கவேண்டும். மூடைகளின் மேல் உற்பத்தி செய்யும் நிறுவனம் அச்சிடப்பட்ட விலைகளுக்கு மட்டுமே விற்க வேண்டும். அதிகப்படியான விலை க்கு விற்கும் விற்பனையாளர்கள் மீது கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள வேளா ண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் புகார் தெரிவிக்கலாம். (எண்கள் 0451- 2461 910, 97894 38386), என்றார்.

## மீன் மார்க்கெட்டிற்கு தனி இடம் ஒதுக்க வேண்டும்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2012,01:23 IST

கருத்தை பதிவு செய்ய

வத்தலக்குண்டு:வத்தலக்குண்டில் மீன் மார்க்கெட்டிற்கு தனி இடம் ஒதுக்க பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும். வத்தலக்குண்டில் தக்காளி, தினசரி காய்கறி, வாழைக்காய், வாழை இலை என தனித்தனி மார்க்கெட்டுகள் இயங்குகின்றன. மீன் மார்க்கெட்டிற்கு தனி இடம் இல்லை. காளியம்மன் கோயில் அருகே மதுரை ரோடு பிளாட்பாரத்தில் கடை வைக்கின்றனர். இதனால் துர்நாற்றம் வீசுகிறது. நடைபாதை முழுவதும் மீன் கழிவுகளாகி விடுவதால் அசுத்தம் ஏற்படுகிறது. சனி, ஞாயிறு கிழமைகளில் அதிக கூட்டம் கூடுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. போக்குவரத்து போலீசார் துவக்கத்தில் கெடுபிடி செய்தனர். மீன்வியாபாரிகள் "அனுசரித்து' செல்வதால் போலீசார் கண்டுகொள்வதில்லை.இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. பேரூராட்சி நிர்வாகம் மீன் விற்பனைக்கு தனி இடம் ஒதுக்கி சுகாதாரம் காக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மானியத்தில் காய்கறி விதைகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2012,01:51 IST

கருத்தை பதிவு செய்ய

இளையான்குடி:இளையான்குடி தோட்டக்கலை உதவி இயக்குநர் கண்ணன் அறிக்கை:இளையான்குடி வட்டார விவசாயிகளுக்கு,தோட்டக்கலைத்துறை மூலம் ஆடிபட்ட காய்கறி விதைகள், வீரிய ஒட்டுரக மிளகாய், வெண்டை, தக்காளி விதைகள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது.மேலும் மா ஒட்டுச் செடிகளும் இலவசமாக வழங்கப்படுகிறது.இப்பகுதி விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி பயன்பெறுமாறும் , மேலும் விவரங்களுக்கு 04564- 245122 எண்ணை தொடர்பு கொள்ளுமாறு,தெரிவித்துள்ளார்.

**தென்காசி பகுதியில் ஆப்பிள் மாதுளை விற்பனை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2012,06:03 IST

கருத்தை பதிவு செய்ய

தென்காசி:தென்காசி பகுதியில் ஆப்பிள், மாதுளை பழங்களின் விற்பனை அமோகமாக உள்ளது.குற்றால சீசனை முன்னிட்டு தென்காசி பகுதியில் மலைப் பகுதியில் விளையும் பழ வகைகள் விற்பனைக்கு அதிகளவில் குவிக்கப்பட்டன. சீசன் டல் அடித்ததால் பழ வகைகளின் விற்பனையும் சரிந்தது. ஆனால் ஆப்பிள், மாதுளை போன்ற பழ வகைகளின் விற்பனை சீராக இருந்தது. ஆப்பிள் கிலோவிற்கு 120 ரூபாய் வரையிலும், மாதுளை கிலோவிற்கு 180 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டன.

தற்போது ஆப்பிள், மாதுளை பழங்களின் அறுவடை சீசன் என்பதால் அவற்றின் வரவு அதிகமாக உள்ளது. பழக்கடைகளில் மட்டும் அல்லாமல் சாலையோரங்களிலும் அதிகளவில் இப்பழங்கள் குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மாதுளை கிலோவிற்கு 100 ரூபாய் முதல் 120 ரூபாய் வரையிலும், ஆப்பிள் கிலோவிற்கு 70 ரூபாய் முதல் 90 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.காஷ்மீர் மாநிலத்திலிருந்து ஆப்பிள் பழங்களும், ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநிலங்களிலிருந்து மாதுளை பழங்களும் அதிகளவில் விற்பனைக்கு வந்துள்ளன. இதனால்தான் இவற்றின் விலை குறைந்துள்ளது. விலை குறைந்ததால் இப்பழங்களை பொதுமக்கள் ஆர்வத்தோடு வாங்கி சென்றனர்.

**தென்காசி பகுதியில் மிளகாய் விளைச்சல் அமோகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2012,06:03 IST

கருத்தை பதிவு செய்ய

தென்காசி:தென்காசி பகுதியில் மிளகாய் அமோகமாக விளைச்சல் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் மிளகாய் அதிகமாக பயிரிடப்பட்டு வத்தலாக காய வைத்து பவுடராக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. தென்மாவட்டங்களை பொறுத்தவரையில் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் பகுதியில் அதிகமாகவும், நெல்லை மாவட்டத்தின் மேற்கு பகுதிகளான ஆலங்குளம், பாவூர்சத்திரம், கீழப்பாவூர், மேலப்பாவூர், அத்தியூத்து, கழுநீர்குளம், மாயமான்குறிச்சி, ராஜபாண்டி, வீ.கே.புதூர், சுரண்டை, சாம்பவர்வடகரை, ஆய்க்குடி போன்ற பகுதிகளில் கிணற்று பாசனம் மூலம் மிளகாய் பயிரிடப்பட்டு வருகிறது.

தற்போது தென்மேற்கு பருவமழை பொய்த்து கிணறுகள் வறண்ட நிலையில் காணப்படுகிறது. மிளகாய் பயிர்களுக்கு அவ்வப்போது ஓரளவு மழை பெய்தால் போதுமானது. மேலும் கிணறுகளில் உள்ள நீரை ஒருசில நேரங்களில் மட்டுமே இப்பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தால் போதுமானதாக கூறப்படுகிறது. இதையடுத்து இப்பகுதியில் அதிக அளவில் மிளகாய் பயிரிடப்பட்டது. தற்போது அமோக விளைச்சல் ஏற்பட்டுள்ளது.கடந்த சில நாட்களாக மிளகாய் கிலோ ஒன்றுக்கு 10 முதல் 12 ரூபாய் வரையிலும் விற்கப்பட்டு வந்தது. தற்போது ஓணம் பண்டிகையை முன்னிட்டு அண்டைய மாநிலமான கேரளாவுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டதால் மிளகாய் 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.மிளகாய் பழங்களை வெயிலில் உலர்த்தி காய வைத்து மிளகாய் வத்தலாக மாற்றி சந்தைக்கு மொத்த கொள்முதல் விலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. விவசாயிகளிடமிருந்து 50 ரூபாய்க்கு நாட்டு வத்தல் வாங்கப்பட்டு மொத்த கொள்முதல் விலைக்கு 60 முதல் 65 ரூபாய் வரை விற்கப்பட்டு வருகிறது. ஏ.ஜி. என்ற பெயர் கொண்ட தரமான வத்தல் 72 முதல் 80 ரூபாய் வரை சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.இதனால் மிளகாய் பயிரிட்ட விவசாயிகள் ஓரளவு நிம்மதி பெருமூச்சுடன் காணப்படுகின்றனர்.

## சிறந்த தரம், உள்நாட்டில் விலை உயர்வால்... பருத்தி இறக்குமதி 12 லட்சம் பொதிகளாக அதிகரிக்கும்

ஆகஸ்ட் 30,2012,00:37



புதுடில்லி:இந்திய ஜவுளி ஆலைகள், நடப்பு பருத்தி பருவத்தில் (அக்.,- செப்.,) 12 லட்சம் பருத்தி பொதிகளை(ஒரு பொதி = 170 கிலோ) இறக்குமதி செய்யக்கூடும் என, பருத்தி ஆலோசனை வாரியம் மதிப்பிட்டுள்ளது.சர்வதேச சந்தையை விட, உள்நாட்டில் பருத்தி விலை உயர்ந்துள்ளதால், அதன் இறக்குமதி அதிகரித்துள்ளது. அயல்நாட்டு பருத்தி வகைகள், அதிக அளவில் நூலிழை உற்பத்தி திறன் கொண்டதாகவும், தரத்தில் சிறந்தவையாகவும் உள்ளன. இது தவிர, குறைந்த வட்டியில், சுலபமாக கிடைக்கும் சர்வதேச கடன் உதவி காரணமாகவும், இந்திய ஜவுளி ஆலைகளின் பருத்தி இறக்குமதி உயர்ந்துள்ளது.

**மதிப்பீடு:**"உள்நாட்டில் பருத்திக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை. பருத்தி ஆலோசனை வாரியத்தின் மதிப்பீட்டின்படி, நடப்பு பருவத்தின் முடிவில், பருத்தி கையிருப்பு 28.46 லட்சம் பொதிகளாக இருக்கும். இவை, ஜவுளி ஆலைகளின் ஒரு மாத தேவையை பூர்த்தி செய்யக்கூடியவை' என, மத்திய ஜவுளி அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்துள்ளார். பருத்தி இறக்குமதிக்கு தடை விதிக்கும் திட்டம் எதுவும், மத்திய அரசுக்கு இல்லை. ஜவுளி ஆலைகள், அவற்றின் விருப்பம் மற்றும் தேவைக்கேற்ப பருத்தி வகைகளை இறக்குமதி செய்து கொள்ளலாம் என, அமைச்சர் கூறினார்.நாட்டின் பருத்தி உற்பத்தி, நடப்பு பருவத்தில், 3.53 கோடி பொதிகளாக இருக்கும் என, பருத்தி ஆலோசனை வாரியம் மதிப்பிட்டுள்ளது. இவை, சென்ற பருவத்தில் 3.39 கோடி பொதிகள் என்ற அளவில் இருந்தன. அதாவது, நடப்பு பருவத்தில், பருத்தி உற்பத்தி, 14 லட்சம் பொதிகள் அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

பருத்தி உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள குஜராத்தின் சவுராஷ்ட்ரா மற்றும் கட்ச் பிராந்தியங்களில், வழக்கத்தை விட, நடப்பாண்டு மழை பொழிவு, 72 சதவீதம் குறைந்துள்ளது. பருத்தி உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ள மகாராஷ்டிராவிலும், போதிய

மழையின்மையால் பருத்தி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

**சாகுபடி பரப்பு:**பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியானா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநில விவசாயிகள், பருத்தி பயிரிடுவதை தவிர்த்து, நெல், கொத்தவரை, பருப்பு வகைகள், கரும்பு உள்ளிட்ட இதர பயிர் சாகுபடியில், கவனம் செலுத்த துவங்கியுள்ளனர். இதனால், இம்மாநிலங்களில், கணிசமான அளவிற்கு, இதன் சாகுபடி பரப்பு குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் தாக்கம், வரும் பருத்தி பருவத்தில் எதிரொலிக்கும். சென்ற ஜூலை 20ம் தேதி நிலவரப்படி, பருத்தி பயிரிடும் பரப்பளவு, சராசரியாக, 7 சதவீதம் குறைந்து, 83.7 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. நடப்பு பருவத்தில், சந்தைக்கு, 3.40 கோடி பருத்தி பொதிகள் வந்துள்ளன. இது, பருத்தி ஆலோசனை வாரியத்தின் மதிப்பீட்டை (3.53 கோடி பருத்தி பொதிகள்) விட குறைவாகும். பருத்தி பருவம் முடிய, இன்னும் ஒரு மாதமே உள்ளதால், பருத்தி உற்பத்தி இலக்கை எட்டுவது கடினம் என்று இத்துறையினர் தெரிவித்தனர்.

**குறைந்தபட்ச ஆதரவு விலை:**பருத்தி வரத்து குறைந்துள்ளதால், அதன் விலை கிடு கிடுவென உயர்ந்து வருகிறது. முன்பேரச் சந்தையில், ஒரு பவுண்டு பருத்தி விலை 88 சென்ட்டாக அதிகரித்துள்ளது. இது, ஆப்ரிக்கா மற்றும் அமெரிக்க பருத்தியின் விலையை விட, முறையே 14 சதவீதம் மற்றும் 10 சதவீதம் அதிகமாகும்.

உள்நாட்டு சந்தையில், ஒரு கேண்டி (356 கிலோ) பருத்தியின் விலை, தரத்திற்கேற்ப 34,700 - 45 ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்துள்ளது.மத்திய வேளாண் அமைச்சகம், வரும் பருவத்திற்கு, ஒரு குவிண்டால் பருத்திக்கு, குறைந்தபட்ச ஆதரவு விலையாக, 3,600-3,900 வழங்க பரிந்துரை செய்துள்ளது. நடப்பு பருவத்தில், இதன் விலை, 2,200-3,300 ரூபாய் என்ற அளவில் உள்ளது.

ஆகஸ்ட் 30,2012,00:37

**நடப்பு 2012-13ம் நிதியாண்டில்...பால் பவுடர் பயன்பாடு 88,000 டன்**



புதுடில்லி:நடப்பு 2012-13ம் நிதியாண்டில், உள்நாட்டில் பால் பவுடருக்கான தேவை, 88 ஆயிரம் டன்னாகவும், கையிருப்பு 1.12 லட்சம் டன்னாகவும் இருக்கும் என, மத்திய வேளாண் இணை அமைச்சர் சரண் தாஸ் மகந்த் பார்லிமென்டில் தெரிவித்தார்.
பால் பவுடருக்கான தேவை குறைவாக உள்ளதால், இதன் விலை குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்கவில்லை.எனினும், டில்லியில் உள்ள, காரி போலி மொத்த விலை சந்தையில், மாத அடிப்படையிலான இதன் சராசரி விலை, கிலோ ஒன்றுக்கு 175 ரூபாயாக உள்ளது என, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.
உள்நாட்டில் பால் விலை மிகவும் அதிகரித்ததை அடுத்து, கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் பால், கொழுப்பு நீக்கப்பட்ட பால்பவுடர் ஆகியவற்றின் ஏற்றுமதிக்கு, மத்திய அரசு, தடை விதித்தது. இந்நிலையில், உள்நாட்டில் பால் பொருட்களின்உற்பத்தி அதிகரித்ததால், நடப்பாண்டு ஜூன் மாதம், மீண்டும் பால் பவுடர் ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது.
நடப்பாண்டு மே மாதத்தில், உள்நாட்டில், ஒரு கிலோ கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடரின் விலை 150 ரூபாய் என்ற அளவில் இருந்தது.இது, சென்ற ஆண்டு இதே மாதத்தில், 190-200 ரூபாய் என்ற அளவில்மிகவும் அதிகரித்து காணப்பட்டது.உலகளவில், பால் உற்பத்தியில், இந்தியா முன்னணி நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. சென்ற 2011ம் ஆண்டில், நம்நாட்டின் பால் உற்பத்தி 12.10 கோடி டன் என்ற அளவில் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2012,00:00 IST



**கூட்டு மீன் வளர்ப்பில் விரால்:**

மீன் வளர்ப்பு குளமொன்றில் குளத்தின் மேல் மட்டம் முதல் அடிமட்டம் வரையிலான பல்வேறு

பகுதிகளிலும் பரவி அப்பகுதிகளில் இருக்கும் பலவகையான உணவினங்களை தமது உணவுப் பழக்கத்திற்கேற்ப உண்டு, இடத்திற்கும் உணவிற்கும் போட்டியில்லாமலும் சண்டையில்லாமலும் கூடி வாழ்ந்து நன்கு வளர்ந்து உயர்வான உற்பத்தியைத் தரக்கூடிய வேக வளர்ச்சிக் கெண்டைகளான கட்லா (நீரின் மேற்பரப்பு), வெள்ளிக்கெண்டை (நீரின் மேற்பரப்பு), ரோகு (நீரின் நடுமட்டம்), மிக்கால் (நீரின் அடிமட்டம்), சாதாக்கெண்டை (நீரின் அடிமட்டம்), புல்கெண்டை (குளத்தின் கரையோரப்பகுதி), வெள்ளிக்கெண்டை ஆகிய கெண்டைமீன்களை உயிரியல் சூழல் மற்றும் வளர்ப்பியலுக்கு உரிய இன விகிதாச்சாரப்படி சரியாக இருப்பு அடர்த்தியில் இருப்புச்செய்து வளர்ப்பது கூட்டுமீன் வளர்ப்பாகும்.

கூட்டுமீன் வளர்ப்புக் குளத்தில் புதிய மீன் இனங்களைச் சேர்த்து வளர்க்கையில் ஏற்கனவே உள்ள மீனினங்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது. கெண்டை, பால்மீன், நன்னீர் இரால் மற்றும் விரால் ஆகியவை கூடுதலாகச் சேர்த்து வளர்க்கலாம். புதிய மீன் இனங்களைச் சேர்க்கும்போது அவற்றுக்கு எவ்வளவு இடம் கொடுக்கலாம் என்பதை அதற்கான மீன்வளர்ப்பு அறிவியல் அறிஞரே வழிகாட்டவேண்டும்.

விரால்களைச் சேர்த்து வளர்ப்பதால் பல பலன்கள் உண்டு. விரால்களை வளர்ப்பதற்கு தனியான வசதி (குளம்) இல்லாதபோது கூட்டு மீன்வளர்ப்பு குளத்தில் விரால்களைக் கெண்டைகளோடு சேர்த்து வளர்த்து பயன்பெறலாம். விரால்கள் மற்ற வளர்ப்பு மீன்களுடன் உணவுக்காக போட்டியிடுவதில்லை. விரால்களுக்கு விசேட சுவாச உறுப்புகள் உண்டு. தோலாலும் சுவாசிக்கும். வெளிமடைக் காற்றையும் சுவாசிக்கும். சில பயனற்ற, சிறிய நாட்டுக்கெண்டைகள் மற்றும் களை மீன்களை விரால்மீன்கள் உண்டு அழித்துவிடும். எனவே களை மீன்களால் உணவு வீணாவது தடுக்கப்பட்டுக் கெண்டை மீன்களுக்கான தீனி, கெண்டைகளுக்கு முழுமையாகக் கிடைக்கும்.

கெண்டை மீன்களின் உற்பத்தியோடு விரால் மீனின் உற்பத்தியும் குளத்தின் உற்பத்தியாகச் சேர்ந்து கிடைப்பதால் குளத்தின் மொத்த மீன் உற்பத்தியும் லாபமும் அதிகமாக இருக்கும். கூட்டுமீன் வளர்ப்பில் இருப்புச் செய்யப்படும் மீன்களுள் 2-5 சதம் மட்டும்விரால் மீன்களை இருப்புச் செய்தால் போதுமானது.

விரால்களுக்கு அவற்றுக்குத் தேவையான மாமிச உணவுகளையும் தருவதாயின் அவற்றின் இருப்பளவு 2 சதவீதத்துக்கு மேல் இருக்கலாம் (5 சதவீதத்திற்குள்). இல்லையேல் இருப்பளவு குறைவாகவே இருக்க வேண்டும்.

கெண்டை மீன்களை குறைந்தது 150-200 கிராம் அளவுவரை வளர்த்த பின்னரே விரால்

குஞ்சுகளை அல்லது ஓரளவு வளர்ந்த விரால்களை கெண்டைகளின் குளத்தில் இருப்புச் செய்யவேண்டும். இதில் கவனக்குறைவு ஏற்பட்டால் விரால் மீன்கள் கெண்டைகளையும் தின்று தீர்த்துவிடும்.

இம்முறைப்படி கெண்டைகளின் வளர்ப்புக்காலம் முழுமையாகவும் (அதிகமாகவும்) விரால்களின் வளர்ப்புக்காலம் குறைவாகவும் இருக்கும். அதாவது விரால்கள் அறுவடைக்கான முழு வளர்ச்சியைப் பெற்றிருக்காது. இக்குறைபாட்டைத் தவிர்க்க, கெண்டை குஞ்சுகளை தனிக்கவனமுடன் சிறப்பாக வளர்த்து, ஒவ்வொன்றும் 150 கிராமுக்குக் குறையாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். இந்நிலையில் கெண்டைகளையும் விரால் குஞ்சுகளையும் ஒன்றாக ஒரே நேரத்தில் இருப்புச் செய்யலாம். கெண்டைகள் ஏற்கனவே ஓரளவு (தப்பித்துக்கொள்ளும்மட்டில்) வளர்த்துவிட்டபடியால் விரால்களால் அவற்றுக்கு ஆபத்துவராது. ஒரு எக்டர் குளத்தில் அதிகபட்சமாக 10,000 மீன்களை (சதுர மீட்டருக்கு ஒன்று) இருப்புச் செய்வதாகக் கொண்டால் அதில் விரால் மீன்களை 2 சதம் மட்டும் இருப்புச் செய்வதாகக் கொண்டால், ஒரு எக்டர் குளத்தில் 200 விரால்களை விளர விடமுடியும். வளர்ப்புக் காலத்தில் ஒவ்வொரு விராலும் ஒரு கிலோ வளர்வதாகக் கொண்டால் (சிறப்புத் தீனியும் தந்து) மொத்தம் 200 கிலோ உற்பத்தி கிடைக்கும். விரால்களை குறைந்தது கிலோ 200 ரூபாய்க்கு (உயிருடன்) விற்கலாம். விரால்களால் மட்டும் ரூ.40,000 வருமானம் கிட்டும்.*(தகவல்:* டாக்டர் வெ.சுந்தரராஜ், 90030 13634, செ.பெரியசாமி, 94431 38573)-**டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

**நன்னீர் முத்து வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2012,00:00 IST

கருத்தை பதிவு செய்ய

முத்து என்பது இயற்கையாக கிடைக்கக்கூடிய விலை உயர்ந்த பொருள் (ரத்தினம், மாணிக்கம் போன்றது). இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் முத்துக்கு தேவை அதிகம். அளவுக்கு மீறின பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழலில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாலும் இயற்கையில் முத்து கிடைப்பது அரிதாகி வருகிறது. இந்தியா வெளிநாடுகளிலிருந்து ஒவ்வொரு வருடமும் வளர்ப்பு முத்துக்களை இறக்குமதி செய்து உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்துவருகிறது. புவனேஷ்வரிலுள்ள மத்திய நன்னீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் - நன்னீரில் முத்து வளர்ப்பது குறித்த தொழில்நுட்பத்தை உருவாக்கி நாடு முழுவதும் விரிவாக்கம் செய்துள்ளது.

இயற்கையில் வெளியிடத்துப் பொருள் ஒன்று அதாவது, மண் துகள், பூச்சிகள் போன்றவை, சிப்பி உடம்பினுள் சென்று, வெளிவராமல் இருக்க, சிப்பியானது அவ்வெளிப் பொருளின் மேல் ஒரு பளபளப்பான பகுதியை உருவாக்குகிறது. இதனால் முத்து உருவாகிறது. இதுதான் முத்து வளர்ப்பிலும் பயன்படுத்தப்படும் ஒரு நுட்பமாகும்.
முத்து என்பது, சிப்பியின் உள் ஓட்டுக்குள் காணப்படும் பளபளப்பான பகுதிக்கு இணையானது. இதனை முத்துப் பகுதிகளின் தாய் என்றும் அழைப்பர். இது கால்சியம் கார்பனேட், இயற்கையான மேட்ரிக்ஸ், தண்ணீர் ஆகிய கலவையில் உருவானது. கடைகளில் கிடைக்கும் முத்துக்கள், இயற்கையில் கிடைப்பவையாக இருக்கும் அல்லது செயற்கையில் செய்தவை அல்லது வளர்த்து கிடைத்தவையாக இருக்கும். செயற்கை முத்துக்கள் அல்லது முத்துக்கள் போன்று இருப்பவை எல்லாம் முத்துக்கள் அல்ல. செயற்கை முத்துக்கள் என்பது தடிமனான, வட்டமான அடிப்பகுதியுடைய, வெளிப்புறத்தில் முத்து போன்று பளபளப்பாக முலாம் பூசப்பட்டு இருக்கும். இயற்கை முத்துக்களில் உள்கரு சிறியதாக இருக்கும். பொதுவாக இயற்கையில் கிடைக்கும் முத்து சிறியதாக இருக்கும்.

வடிவம் வித்தியாசமாக காணப்படும். வளர்க்கப் படும் முத்துக்களும் இயற்கையான முத்துக்கள் போலத்தான். ஒரே வித்தியாசம் மனிதனின் முயற்சியால் உட்கருவை சிப்பிக்குள் புகுத்தி, நமக்கு தேவையான அளவு, வடிவம், நிறம், அழுத்தமுடைய முத்துக்களை உருவாக்குகிறோம். இந்தியாவில் கிடைக்கும் முத்துக்களை உருவாக்கும் மூன்று வகையான நன்னீர் சிப்பிகள் ஆவன லேமல்லிடன்ஸ் மார்ஜினாலிஸ், லே கோரியான்ஸ், பேரிசியா காருகேட்டா.

### வளர்ப்பு முறைகள்:

நன்னீர் முத்துக்கள் வளர்ப்பு என்பது 6 நிலைகளில், முறையாக செய்யப் படுகிறது. அவையாவன; சிப்பிகள் சேகரிப்பது, வளர்ப்புக்கு முன் முறைப்படுத்துதல், அறுவை சிகிச்சை, வளர்ப்புக்கு பின் முறைப்படுத்துதல், குளத்தில் வளர்ப்பு, முத்துக்களை அறுவடை செய்தல்.
நன்னீர் முத்து வளர்ப்பு பொருளா தாரம்: அலங்கரிக்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்பட்ட முத்து என்பது பழைய முறையாக இருந்தாலும் மத்திய நன்னீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலைய ஆய்வுகளின் படி மதிப்பு மிக்கவையாகவே இருக்கின்றன. நிகர வருமானம் ரூ.2.177 லட்சம்/ ஒரு ஏக்கருக்கு / காலம் 1.5 வருடம்.**ஆர்.ஜி.ரீஹானா,அக்ரி கிளினிக், தாராபுரம்.**

## நன்னீர் முத்து வளர்ப்பு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2012,00:00 IST

முத்து என்பது இயற்கையாக கிடைக்கக்கூடிய விலை உயர்ந்த பொருள் (ரத்தினம், மாணிக்கம் போன்றது). இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் முத்துக்கு தேவை அதிகம். அளவுக்கு மீறின பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழலில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாலும் இயற்கையில் முத்து கிடைப்பது அரிதாகி வருகிறது. இந்தியா வெளிநாடுகளிலிருந்து ஒவ்வொரு வருடமும் வளர்ப்பு முத்துக்களை இறக்குமதி செய்து உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்துவருகிறது. புவனேஷ்வரிலுள்ள மத்திய நன்னீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் - நன்னீரில் முத்து வளர்ப்பது குறித்த தொழில்நுட்பத்தை உருவாக்கி நாடு முழுவதும் விரிவாக்கம் செய்துள்ளது. இயற்கையில் வெளியிடத்துப் பொருள் ஒன்று அதாவது, மண் துகள், பூச்சிகள் போன்றவை, சிப்பி உடம்பினுள் சென்று, வெளிவராமல் இருக்க, சிப்பியானது அவ்வெளிப் பொருளின் மேல் ஒரு பளபளப்பான பகுதியை உருவாக்குகிறது. இதனால் முத்து உருவாகிறது. இதுதான் முத்து வளர்ப்பிலும் பயன்படுத்தப்படும் ஒரு நுட்பமாகும். முத்து என்பது, சிப்பியின் உள் ஓட்டுக்குள் காணப்படும் பளபளப்பான பகுதிக்கு இணையானது. இதனை முத்துப் பகுதிகளின் தாய் என்றும் அழைப்பர். இது கால்சியம் கார்பனேட், இயற்கையான மேட்ரிக்ஸ், தண்ணீர் ஆகிய கலவையில் உருவானது. கடைகளில் கிடைக்கும் முத்துக்கள், இயற்கையில் கிடைப்பவையாக இருக்கும் அல்லது செயற்கையில் செய்தவை அல்லது வளர்த்து கிடைத்தவையாக இருக்கும். செயற்கை முத்துக்கள் அல்லது முத்துக்கள் போன்று இருப்பவை எல்லாம் முத்துக்கள் அல்ல. செயற்கை முத்துக்கள் என்பது தடிமனான, வட்டமான அடிப்பகுதியுடைய, வெளிப்புறத்தில் முத்து போன்று பளபளப்பாக முலாம் பூசப்பட்டு இருக்கும். இயற்கை முத்துக்களில் உள்கரு சிறியதாக இருக்கும். பொதுவாக இயற்கையில் கிடைக்கும் முத்து சிறியதாக இருக்கும். வடிவம் வித்தியாசமாக காணப்படும். வளர்க்கப் படும் முத்துக்களும் இயற்கையான முத்துக்கள் போலத்தான். ஒரே வித்தியாசம் மனிதனின் முயற்சியால் உட்கருவை சிப்பிக்குள் புகுத்தி, நமக்கு தேவையான அளவு, வடிவம், நிறம், அழுத்தமுடைய முத்துக்களை உருவாக்குகிறோம். இந்தியாவில் கிடைக்கும் முத்துக்களை உருவாக்கும் மூன்று வகையான நன்னீர் சிப்பிகள் ஆவன லேமல்லிடன்ஸ் மார்ஜினாலிஸ், லே கோரியான்ஸ், பேரிசியா காருகேட்டா.

### வளர்ப்பு முறைகள்:

நன்னீர் முத்துக்கள் வளர்ப்பு என்பது 6 நிலைகளில், முறையாக செய்யப் படுகிறது. அவையாவன; சிப்பிகள் சேகரிப்பது, வளர்ப்புக்கு முன் முறைப்படுத்துதல், அறுவை சிகிச்சை, வளர்ப்புக்கு பின்

முறைப்படுத்துதல், குளத்தில் வளர்ப்பு, முத்துக்களை அறுவடை செய்தல். நன்னீர் முத்து வளர்ப்பு பொருளா தாரம்: அலங்கரிக்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்பட்ட முத்து என்பது பழைய முறையாக இருந்தாலும் மத்திய நன்னீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலைய ஆய்வுகளின் படி மதிப்பு மிக்கவையாகவே இருக்கின்றன. நிகர வருமானம் ரூ.2.177 லட்சம்/ ஒரு ஏக்கருக்கு / காலம் 1.5 வருடம்.**ஆர்.ஜி.ரீஹானா,அக்ரி கிளினிக், தாராபுரம்.**

**நீடித்த நிலைத்த கரும்பு சாகுபடியில் தாய்க்கரும்பு பயிரை அறுக்கும் கருவி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2012,00:00 IST

கருத்தை பதிவு செய்ய

கரும்பில் அதிக மகசூல் எடுப்பதற்கான தொழில்நுட்பம் "நீடித்த நிலைத்த கரும்பு சாகுபடி' தொழில்நுட்பமாகும். இதற்கு 500லிருந்து 650 கிலோ விதைக்கரும்பு போதுமானதாகும். பருக்களுடன் சிறிது கரும்புத் தண்டும் பெயர்த்து எடுத்து பிளாஸ்டிக் குழித்தட்டில் மக்கிய தென்னை நார்க்கழிவு அல்லது மண்புழு எரு இட்டு பருவை குழியில் நட்டு வைத்து இத்தட்டுக்களை பசுமைக்குடிலில் வைத்து நாற்று உற்பத்தி செய்து தரமான நாற்றுக்களை வளர்க்க வேண்டும். ஒரு மாத வயதுடைய நாற்றுக்களை / வயலில் 5 அடிக்கு 2 அடி இடைவெளியில் நட்டு சாகுபடி செய்ய வேண்டும். இதற்கு ஏக்கருக்கு 4450 நாற்றுக்கள் வேண்டும். நாற்று முளைக்காத போக்கிடம் நடுவதற்கு அந்த மாதிரி சூழல் வராது. வந்தால் மொத்தமாக 4600 நாற்றுக்கள் போதுமான தேவையாகும். கரும்பு நாற்றை வரிசையில் 2அடி இடைவெளி விட்டு நடும்போதே தாய்ப்பயிரோடு பக்கத்தூரும் இரண்டு அல்லது ஒன்று குறுகிய நீளத்தில் வளர்ந்திருக்கும். வயலில் நட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு தாய்ப்பயிரை பூமிமட்டத்திலிருந்து இரண்டு அங்குலம் விட்டு அறுத்துவிட வேண்டும். இதனால் மேலும் அதிக தூர்கள் வளரும். இது பக்கத்தூரையும் புழு குருத்தையும் சேதப்படுத்துவதால் நமக்கு கரும்பின் எண்ணிக்கை குறையும். ஆனால் தாய்ப்பயிரை அறுத்துவிடுவதால் மேற்கண்ட செயல்பாடு நடக்காது. இளங்குருத்துப் புழுவால் இயற்கையாக நடப்பது, அறுத்துவிடுவதால் செயற்கையாக இங்கு செய்கிறோம். இயற்கையாக புழுவால் நடப்பது பக்கத்தூரையும் தாக்கி அழிக்கும். அதனால் அது நமக்கு நல்லதில்லை. சில ரக இளங்கரும்புப் பயிரின் தண்டில் முசுமுசு என்று முள்ளு மாதிரி சொணை இருக்கும். அது ஆட்களைக் கொண்டு அறுத்துவிடும்போது கையில் குத்தும். வேலையாட்கள் கீழே குனிந்துதான் அரிவாள் கொண்டு அறுத்துவிட வேண்டும். இந்த இடையூறுகளினால் வேலை ஆட்களின் வேலை பாதிக்கும். இதைக்கருத்தில் கொண்டு சுலபமாக வேலை நடக்கவும், வேலைஆட்களின்

கைகளில் எந்தவித பாதிப்பும் இல்லாமல் செய்யவும் ஒரு கருவி உருவாக்கப்பட்டது. படத்தில் உள்ளவாறு இருக்கும் கருவியைக் கொண்டு இளங்கரும்புப் பயிரின் தாய்ப்பயிரை ஆட்களின் உதவியால் அறுத்துவிடலாம். இக்கருவியை உபயோகிக்கும்போது கீழே குனியவும், தண்டை பிடிக்கவும் வேண்டாம். எந்தப்பயிரை அறுத்துவிட வேண்டுமோ அந்தப் பயிரை கருவியால் நின்றுகொண்டே அறுத்துவிட்டு நடந்துசெல்லலாம். நாமே காலை வேளை இரண்டு நாட்களில் ஒரு ஏக்கர் பயிரை அறுத்துவிட்டு வேலையை முடிக்கலாம். அறுத்த பயிரை மாட்டிற்கு தீனமாகக் கொடுக்கலாம். இளம் பயிராக இருப்பதால் மாடும் நன்கு சாப்பிடும். அதற்குப்பிறகு சொட்டு நீர்ப் பாசனத்தோடு உரக் கலவையையும் பயிருக்கடியில் கொடுக்கும் போது பயிர் சத்தையும் நீரையும் எடுத்துக் கொண்டு அதிக எண்ணிக்கையில் பக்கத்தூரை வளரச் செய்யும். பக்கத் தூர்களின் வயதும் ஏறத்தாழ ஒரே சீராக இருக்கும். அதனால் ஒவ்வொரு தூரும் கரும்பாய் மாறும். கரும்பின் உயரமும் தடிமனும் அதிகரிப்பதால் ஒரு கரும்பின் எடையானது அதிகரிக்கும். இப்படி ஒவ்வொரு கரும்பின் எடை கூடுவதால் ஒரு குத்தின் எடை அதிகரிக்கும். இதனால் வயலின் இருக்கிற ஒட்டுமொத்த கரும்பின் மகசூல் அதிகரிக்கும். தகவல்: முனைவர் கு.கதிரேசன், இயக்குனர் (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு), டி.என்.ஏ.யு.,கோவை. 0422-661 1310.

-*கே.சத்தியபிரபா, உடுமலை.*

## தமிழக அரசின் வேளாண்மை பொறியியல் துறையின் மானியத்திட்டங்கள்:

*நில மேம்பாட்டுத் திட்டம்:* விவசாயிகளுக்கு தேவைப்படும் வேளாண்மை இயந்திரங்கள் வாடகைக்கு விடுதல்: புல்டோசர் - வாடகை ரூ.755/ மணிக்கு, டிராக்டர் - வாடகை ரூ.300/- மணிக்கு, நெல் அறுவடை இயந்திரம் - வாடகை ரூ.825/மணிக்கு, சிறு பாசனத் திட்டம்: விவசாயிகளின் நிலங்களில் குழாய், கிணறு அமைத்தல்: கைத்துளைக் கருவி - வாடகை ரூ.30/- மீட்டருக்கு.

*மழைநீர் சேமிப்புத் திட்டம்:* விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக்குட்டை அமைத்து மழைநீரை சேகரித்து மீன்வளர்ப்பு மற்றும் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்துதல் - பண்ணைக்குட்டை அமைத்தல், கிராம ஊரணி அமைத்தல் - குட்டை ஒன்றுக்கு ரூ.54,000. ஊரணி ஒன்றுக்கு ரூ.1,75,000.

*நீர்வளம் மற்றும் நிலவளத் திட்டம்:* உத்தரகோசமங்கை, கிருதுமால் மற்றும் பரளையாறு உப வடிநிலப் பகுதிகள்: பண்ணைக்குட்டை அமைத்தல், பயனாளிகள் சங்கத்திற்கு இலவசமாக வேளாண் கருவிகள் வழங்குதல், சொட்டுநீர் / தெளிப்புநீர் பாசனம் - குட்டை ஒன்றுக்கு ரூ.45,000. கருவிகளுக்கு முழு மானியம் 100 சதவீத மானியம்.

*தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்/மத்திய சார்பு/திட்டம்:* வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகள்

விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கி, பண்ணை பணிகளை இயந்திர மயமாக்கி கூலி ஆட்கள் தட்டுப்பாட்டை தவிர்த்து சாகுபடி செலவினை குறைத்தல் - டிராக்டர் ஒன்றுக்கு ரூ.45,000 மானியம். பவர் டில்லர் - ரூ.45,000. ரோட்டவேட்டர் - ரூ.20,000. அறுவடை இயந்திரம் - ரூ.4,00,000. மருந்து தெளிப்பான் - ரூ.20,000. மினி டிராக்டர் - ரூ.1,25,000. களை எடுப்பான் - ரூ.50,000.

*தொடக்க வேளாண்மை கடன்:* கூட்டுறவு சங்கங்களுக்கு விவசாயிகளின் பயன்பாட்டிற்காக பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல் - விவசாயிகள் தங்கள் பகுதிக்கு தேவைப்படும் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விவரத்தை அந்தந்த சங்கச் செயலாளரிடம் மனு அளிக்க வேண்டும் - 50 சதவீதம் மானியம்.

*தகவல்:* அந்தந்த மாவட்ட செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை)

## இறைச்சிக்காக மாடுகள் விற்பனை செய்வது அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2012,23:27 IST

கருத்தை பதிவு செய்ய

தியாகதுருகம்:இறைச்சிக்காக மாடுகள் விற்பனை செய்யப்பட்டு வெளிமாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுவது அதிகரித்து வருவதால் கள்ளக்குறிச்சி பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை வேகமாக குறைந்து வருகிறது.விவசாயிகளின் உற்ற நண்பனாக மாடுகள் விளங்குகின்றன. பழங்காலம் தொட்டே விவசாய தொழிலில் மாடுகளின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து வருகிறது. உயிர்களுக்கு உணவிடும் முக்கிய தொழிலான விவசாயத்திற்கு உற்றதுணையாக உள்ள மாடுகளை தெய்வமாக மதித்து வணங்குகின்றனர். மாடுகளை வளர்ப்பதில் விவசாயிகளுக்கு ஆர்வம் ஏற்பட்டதன் காரணாக பால் உற்பத்தியும் பெருகியது.கடந்த காலங்களில் நிலத்தை உழவும், வண்டி இழுக்கவும், நீர் இறைக்கவும், தானியங்களை பிரித்து எடுக்கவும் மாடுகளை பயன்படுத்தி வந்தனர். தற்போது இவை அனைத்திற்கும் தனித்தனியே இயந்திரங்கள் அதிக அளவில் புழக்கத்திற்கு வந்துவிட்டதால் மாடுகளின் தேவை அடியோடு குறைந்துவிட்டது.சாண எருவை பயன்படுத்தி பயிர் சாகுபடி செய்ததால் ரசாயன உரங்களின் கலப்பின்றி தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இயற்கை உரங்கள் பயன்படுத்துவது குறைந்து தற்போது ரசாயன உரங்களும், பூச்சுமருந்துகளும் விவசாயத்திற்கு அதிகம் பயன்படுத்தப்படுவதால் தானியங்கள் விஷமாக மாறி பல நோய்களுக்கு காரணமாகிவிட்டது. விவசாய பயன்பாட்டிற்கு நவீன இயந்திரங்கள் வந்ததன் விளைவாக மாடுகளின் தேவை குறைய தொடங்கியது.

இயந்திரங்களை பயன்படுத்தினால் வேலைகள் விரைவாக முடிவதாலும் நேரம் மிச்சம்,

கூலியாட்கள் பிரச்னை உள்ளிட்டவைகளில் இருந்து தீர்வு கிடைப்பதால் விவசாய வேலைகளுக்கு மாடுகளை பயன்படுத்துவதை விவசாயிகள் தவிர்த்து வருகின்றனர். இதனால் கிராமப்புறங்களில் வளர்க்கப்படும் நாட்டு மாடுகள் சமீபகாலமாக இறைச்சிக்காக அனுப்பப்படுவது அதிகரித்து வருகிறது. வெளி மாநிலங்களில் இவைகளுக்கு நல்ல விலை கிடைப்பதால் லாரிகளில் ஏற்றி அனுப்புகின்றனர். கள்ளக்குறிச்சி சுற்றியுள்ள கிராமங்களில் நாட்டு மாடுகளை பார்ப்பது அரிதாகி வருகிறது. பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிக பால் கொடுக்கும் உயர் ரக பசுக்களை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். திமிரில் கொழுத்து கம்பீரமாக நடைபோடும் காளை மாடுகளை கிராமப்புறங்களில் தேடினாலும் தற்போது கிடைப்பதில்லை. இறைச்சிக்காக பசுமாடுகளை விட காளை மாடுகள் நல்ல விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் காளை மாடுகள் வேகமாக அழிந்து வருகின்றன.

பசுக்கள் சினையாக கால்நடை மருத்துவமனைகளில் ஊசிமூலம் செயற்கை கருத்தரிப்பு முறை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் காளை மாடுகளின் தேவை குறைந்துவிட்டது.தெய்வமாக வழிபடவேண்டிய மாடுகளை இறைச்சிக்காக அனுப்பிவைப்பது அதிகரித்து வருகிறது. தியாகதுருகம், சின்னசேலம், எலவனாசூர்கோட்டை, மடப்பட்டு உள்ளிட்ட இடங்களில் நடக்கும் வாரசந்தைகளில் இறைச்சிக்காக விற்கப்படும் மாடுகள் மந்தை மந்தையாக நிற்கும் பரிதாப காட்சியை அதிகம் காணமுடிகிறது. இவற்றை அடித்து லாரிகளில் ஏற்றி கழுத்தை திருப்பக்கூட முடியாத வகையில் கட்டிவைத்து பல நூறு கி.மீ., தூரத்திற்கு சித்ரவதை செய்து கொண்டுசெல்லும் அவலம் தொடர்கதையாக நடந்து வருகிறது.தெய்வமாக மதிக்கப்பட்ட மாடுகளின் தேவை குறைந்ததால் இறைச்சிக்காக அனுப்பும் நடைமுறை அதிகரித்து வருகிறது. நாட்டு மாடுகளின் எண்ணிக்கை கள்ளக்குறிச்சி பகுதியில் வேகமாக குறைந்து வருகிறது.இவற்றை பாதுகாக்க வேண்டும் என்று மிருக நல ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

**பசுமை வீடு திட்டம் அதிகாரிகள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2012,23:27 IST

கருத்தை பதிவு செய்ய

வானூர்:பசுமை வீடுகள் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் முன்னேற்றம் குறித்த ஆய்வு கூட்டம் நடந்தது.திருச்சிற்றம்பலம் கூட்ரோடில் உள்ள பி.டி. ஓ., அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு, மாவட்ட செயற்பொறியாளர் வரதராஜபெருமாள் தலைமை தாங்கினார். பி.டி.ஓ., க்கள் வெங் கடேசன், பலராமன் உடனிருந்தனர்.

**கால்நடை பராமரிப்புத்துறை விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2012,23:27 IST

கருத்தை பதிவு செய்ய

திருக்கோவிலூர்:திருக்கோவிலூர் ஒன்றிய கால்நடைபராமரிப்புத்துறை சார்பில் ஆஸ்காடு திட்ட விழிப்புணர்வு முகாம் நடந்தது.திருக்கோவிலூர் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் நடந்த முகாமிற்கு நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் கே.மகேந்திரன் தலைமை தாங்கினார். பராமரிப்புத்துறை கோட்ட உதவி இயக்குனர் டாக்டர் குபேந்திரன் சிறப்புரை ஆற்றினார்.டாக்டர்கள் பாலமுருகு, கலியமூர்த்தி, மணிகண்டன் கலந்து கொண்டு, கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள், தடுப்பு முறைகள் மற்றும் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றி விளக்கிப் பேசினர். ஏராளமான விவசாயிகள் முகாமில் கலந்து கொண்டனர். உதவி மருத்துவர் மகேஷ்ராம் நன்றி கூறினார்.

**பட்டுப்பூச்சி வளர்ப்புக்கான கட்டடம் குந்தலம்பட்டு கிராமத்தில் வீணாகிறது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2012,21:49 IST

கருத்தை பதிவு செய்ய

அவலூர்பேட்டை:குந்தலம்பட்டில் பல ஆண்டுகளாக பூட்டிக் கிடக்கும் பட்டுப்பூச்சி வளர்ப்பு கட்டடம் வீணாகி வருகிறது.மேல்மலையனூர் ஒன்றியம் குந்தலம்பட்டு கிராமத்தில் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்னர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்தில் 6 லட்சம் ரூபாய் செலவில் பட்டுப்பூச்சி வளர்ப்பு கட்டடம் கட்டப்பட்டது.இவ்வூரை சேர்ந்தவர்களும், அருகில் உள்ள விவசாயிகளும் சில ஆண்டுகள் வரை பட்டுப்பூச்சியை வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டனர். பின்னர் கடந்த ஆறு ஆண்டுகளாக இத்தொழிலில் விவசாயிகள் ஆர்வம் படிப்படியாக குறைந்துபோனது.

அதற்கேற்றாற் போல் பட்டுப்பூச்சி துறையை சேர்ந்த கள அலுவலர் மற்றும் வளர்ச்சி அதிகாரிகளும் இப்பகுதி விவசாயிகளை இத்தொழிலில் மீண்டும் ஈடுபட வேண்டும் என வலியுறுத்தவில்லை.இதனால் பெரிய அளவில் பட்டுப்பூச்சிகள் வளர்க்க தகுந்த சூழலுடன் மின் விசிறிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடம் பூட்டப்பட்டது.இதனை தொடர்ந்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. தற்போது விவசாயிகள் பயன்படுத்தாத நிலையில் பொலிவை இழந்து கிராமத்தின் மையப்பகுதியில் பிரமாண்டமான கட்டடம் வீணாகி வருகிறது. பட்டுப்பூச்சி துறை சேர்ந்த அதிகாரிகள் இப்பகுதியில் முகாமிட்டு கிராம விவசாயிகளிடம்

ஆர்வத்தை ஏற்படுத்தியும், அரசின் திட்டங்களை விளக்கி விழிப்புணர்வூட்டினால் நிச்சயம் இக்கட்டடம் மீண்டும் களைகட்டும். பட்டுப்பூச்சி உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபடும் வாய்ப்பும் உருவாகும்.

**விவசாயிகள் கணக்கெடுப்பு குறித்து அதிகாரிகள் ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2012,21:41 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம்:ஊரக வேலைத் திட்டப் பணிகளுக்கு, விவசாயிகள் புள்ளி விபரங்கள் கணக்கெடுப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடந்தது.விழுப்புரம் தாலுகா அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு தாசில்தார் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். ஆர்.டி.ஓ., அலுவலக உதவியாளர் ரவிக் கண்ணன், துணை தாசில்தார்கள் வேல்முருகன், இளங்கோவன், பார்த் திபன், ஜெயச்சந்திரன், துணை பி. டி.ஓ., கிஷோர், வேளாண் அலுவ லர் வீராசாமி முன்னிலை வகித்தனர்.காணை, விக்கிரவாண்டி, கண்டமங்கலம், கோலியனூர் ஒன்றியத்தைச் சேர்ந்த வி.ஏ.ஓ.,க்கள், வருவாய் ஆய்வாளர்கள், வேளாண்துறை அலுவலர்கள், பி.டி.ஓ., அலுவலக ஊழியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

தேசிய ஊரக வேலைத் திட்டத்தில், விரைவில் விவசாய மேம்பாட்டுப் பணிகள் நடக்க உள்ளது. இதற்காக, சிறு, குறு விவசாயிகள், எஸ்.சி.,-எஸ்.டி., விவசாயிகள் பற்றிய புள்ளி விபரங்கள் சேகரிக்கபட உள்ளது. இதற்கான படிவங்கள் வழங்கப்பட்டுள்ளதால் உடனே விவசாயிகள், அவர்களது நிலப் பரப்புகள் குறித்த தகவல்களை சேகரித்து வழங்க வேண்டுமென அலுவலர்களுக்கு, அதிகாரிகள் ஆலோசனை வழங்கினர். தாலுகா அலுவலக உதவியாளர் குணசேகரன் மற்றும் ஊழியர்கள் கூட்ட ஏற்பாடுகளை செய்தனர்.

தர்மபுரி மாவட்டத்தில் 417 ஏக்கர் பரப்பில் சொட்டு நீர் பாசனம் தயார் நிலையில் பணி ஆணை

பதிவு செய்த நேரம்:2012-08-30 09:44:39

தர்மபுரி,: தமிழக அரசு வேளாண் சார்ந்த 5 துறைகள் மூலமாக 417 ஏக்கர் பரப்பில் சொட்டு நீர் பாசன முறையில் பயிர் சாகுபடி செய்ய பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு சொட்டு நீர் பாசன முறையில், பயிர் சாகுபடி பரப்பை அதிகரிக்க, 100 சதவீதம் மான்யம் வழங்குகிறது. இம்முறையில் காய்கறி, பயிர்கள், பழமரங்கள், தென்னை, மரவள்ளி, மஞ்சள், வாழை, கரும்பு போன்ற பயிர்களை சாகுபடி செய்யலாம். சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க அதிகபட்சமாக ரூ43 ஆயிரத்து 816 மான்யம் வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கர் முதல் ஐந்து ஏக்கர் வரை சொட்டுநீர் பாசனம் அமைக்கலாம். பெண்கள், ஆதி திராவிடர், பழங்குடியினர், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் மாற்றுத்திறனாளி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன் பெறும் விவசாயிகள் சிட்டா அடங்கல், வரைபடம், ரேஷன் கார்டு ஜெராக்ஸ், சமீபத்தில் எடுக்கப்பட்ட மூன்று பாஸ்போர்ட் சைஸ் போட்டோ மற்றும் விவசாயிகளுக்கான சான்று ஆகியவற்றை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

இந்நிலையில், மாவட்டத்தில் பருவ மழை உரிய நேரத்தில் பெய்யாததால், 968 விவசாயிகள் சொட்டு நீர் பாசன பணியை தொடர முடியாமல் உள்ளனர். கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால், அதிகாரிகளின் ஆலோசனைப்படி வயல்களில் குழிகள் தோண்டும் பணிகளை விவசாயிகள் தங்களது சொந்த செலவில் செய்து வருகின்றனர்.

இதை தொடர்ந்து சொட்டுநீர் பாசன கருவிகள் வழங்கும் நிறுவனம் சம்பந்தப்பட்ட விவசாயிகளின் நிலங்களில் கருவிகளை பொருத்தி வருகின்றன. இதுகுறித்து தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் கூறுகையில், பருவ மழை தாமதத்தால் விவசாயிகள் சொட்டுநீர் பாசனத்திற்கு தேவையான கருவிகளை பெற முடியாமல் உள்ளனர். கடந்த சில வாரங்களாக மழை பெய்துள்ளதால் வயல்களில் குழி தோண்டும் பணிகள் நடந்து வருகிறது.

தகுதியுள்ள விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசன கருவிகள் வழங்கப்படும். இத்திட்டம் தொடர்பாக தர்மபுரி மாவட்டத்தில் புகார் வரவில்லை. சுமார் 417 ஹெக்டேர் பரப்பில் தோட்டக்கலைத் துறை மற்றும் விவசாயத்துறை சார்பில் 968 விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் ஒர்க் ஆர்டர் தயார் நிலையில் உள்ளது. விவசாயிகள் தங்களது வயல்களில் குழிகளை தோண்டி அலுவலர்கள் ஆலோசனைப்படி சொட்டுநீர் பாசனத்தை அமைத்துக் கொள்ளலாம் என்றனர்.

## முப்பருவ கல்விமுறை ஆய்வு கூட்டம்

பதிவு செய்த நேரம்:2012-08-29 11:05:33

பழநி, : பழநி கல்வி மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் முப்பருவ கல்வி முறை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பாக தமிழ்நாடு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணை இயக்குநர் செல்வராஜ் ஆய்வு கூட்டத்தை பழநியில் நடத்தினார். கூட்டத்தில் 107 பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு பள்ளியிலும் முழுமையான தொடர் மதிப்பீடு கல்வி முறை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என ஆய்வு செய்யப்பட்டது. திண்டுக்கல் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மூர்த்தி, பழநி கல்வி மாவட்ட அலுவலர் விஜயன், திண்டுக்கல் மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர் ராமகிருஷ்ணன், ஒட்டன்சத்திரம் ஆசிரியர் பயிற்சி நிலைய முதல்வர் மோகன்ராம், பழநி வட்டார வளமைய மேற்பார்வையாள் ராபியாபீவி, அனைவருக்கும் கல்வி இயக்க ஒருங்கிணைப்பாளர் சரவணக்குமார் கலந்துகொண்டனர்.

## பூக்கள் விலை இரண்டு மடங்காக உயர்வு குண்டுமல்லி கிலோ ரூ400

பதிவு செய்த நேரம்:2012-08-29 10:09:50

சேலம், : கேரள மக்களின் முக்கிய பண்டிகையான ஓணம் பண்டிகை இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் பல்வேறு பூக்களைக்கொண்டு அத்தப்பூ கோலம் விடுவது கேரள மக்களின் சிறப்பு அம்சமாகும். இதையொட்டி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கேரளா மாநிலத்திற்கு பூக்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதில் சேலத்தில் இருந்து அதிகளவில் பூக்கள் கேரளா செல்வதால், எப்போதும் இல்லாத வகையில் விலை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து சேலம் வ.உ.சி மார்க்கெட்டைச் சேர்ந்த பூ வியாபாரி மோகன் கூறியது: சேலம் மாவட்டத்தில் உற்பத்தியாகும் பூக்கள் சேலம் வ.உ.சி மார்க்கெட்டிற்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து வெளியூர் வியாபாரிகள் மொத்த விலைக்கு வாங்கி செல்கின்றனர். தற்போது கேரளாவில் ஓணம் பண்டிகை என்பதால் கடந்த மூன்று நாட்களாக சேலம் மார்க்கெட்டில் கேரளா வியாபாரிகளின் வருகை அதிகரித்துள்ளது. இங்கிருந்து 3 நாட்களில் 20 டன் பூக்கள் கேரள மாநிலம் பாலக்காடு, திருச்சூர், கோட்டயம், திருவனந்தபுரம், கொச்சி

உள்ளிட்ட நகரங்களுக்கு பூக்கள் சென்றுள்ளது. இதனால் பூக்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.
கடந்த மூன்று நாட்களாக கிலோ ரூ180 விற்பனை செய்யப்பட்ட குண்டு மல்லி, கனகாம்பரம், சன்னமல்லி போன் றவை நேற்று ரூ400 ஆக உயர்ந்துள்ளது. இதுபோல் ரூ30க்கு விற்ற அரளி ரூ120, ரூ60க்கு விற்ற சாமந்தி ரூ140, ரூ20க்கு விற்ற செண்டுமல்லி ரூ50க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுபோல் தொடர்ந்து முகூர் த்தநாட்கள், விநாயகர் சதுர்த்தி என்று விஷேச நாட்கள் வருவதால் பூக்கள் விலை தொடர்ந்து உயர வாய் ப்பு உள்ளது. இவ்வாறு பூ வியா பாரி மோகன் கூறினார்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் 130 டன் விதை நெல் விநியோகிக்க இலக்கு

பதிவு செய்த நேரம்:2012-08-29 09:59:07

திருப்பூர், : விவசாயிகளுக்கு 130 டன் வரை, மானிய விலையில், விதை நெல் வழங்க, மாவட்ட நிர்வாகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.
திருப்பூர் மாவட்டத்தில், சம்பா பட்டத்தில் அமராவதி, கீழ்பவானி, பிஏபி மற்றும் கிணற்று பாசனத்தில் மொத்தம் 10 ஆயிரம் ஹெக்டேரில், விவசாயிகள் ஆண்டுதோறும் நெல் நடவு செய்து வருகின்றனர்.
உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம் மற்றும் விதை கிராம திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை நெல் வழங்க, மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் பாசனத்துக்கு வாய்கால்களில் தண்ணீர் விடப்படலாம் என்ற நம்பிக்கையில் அணமையில் பெய்த மழையை வைத்து விவசாயிகள், நாற்று பாவும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கிணற்று பாசனம் உள்ள சில இடங்களில் நெல் பாவும் பணி நடைபெறறு வருகிறது.
அனைத்து விவசாயிகளும் நெல் நடவு பணியில் ஈடுபட உள்ளனர். இவர்களுக்கு, விவசாயம், கூட்டுறவு துறை மற்றும் தனியார் உரக்கடைகள் மூலம் மானிய விலையில், 130 டன் வரை, மானியத்தில் விதை நெல் வழங்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
அதன்படி, விவசாய விற்பனை மையம் தொடக்க விவசாய கூட்டுறவு கடன் சங்கங்கள், தனியார் உரக்கடைகள் மூலம் விதை நெல் விற்பனை செய்யப்படுகிறது. ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின 90 டன் விதை நெல் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் விதை நெல் கிலோ ரூ.25க்கு விற்கப்படுகிறது.
இதில், கிலோவிற்கு ரூ.5 மானியம் போக ரூ.20க்கு வழங்கப்படும். விதை கிராம திட்டத்தின் கீழ்,

40 டன் விதை நெல் விநியோகம் செய்யப்படும். இதில் கிலோருக்கு ரூ.12.50 மானியம் போக, ரூ.12.50 மட்டும் செலுத்தினால் போதும். இப்பகுதியில் நன்கு விளையும், ஏடிடி 36, 37 43, 45 மற்றும் 47 ரக நெல் விதைகள் வழங்கப்படவுள்ளது. இதற்காக, விவசாயம், கூட்டுறவு மற்றும் தனியார் கடைகளுக்கு விதை நெல் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பசுமை வீடு பயனாளிகள் விழிப்புணர்வு முகாம்

பதிவு செய்த நேரம்:2012-08-29 09:58:18

உடுமலை, : உடுமலை ஒன்றியத்தில் 2012-13ம் ஆண்டிற்கான பசுமை வீடுகள், தொகுப்பு வீடுகள் பயனாளிகளுக்கான விழிப்புணர்வு முகாம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடந்தது.

தமிழக அரசின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு248, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 698 வீடு உடுமலை ஒன்றியத்தில் கட்ட உத்தரவு வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெறவுள்ள பயனாளிகளுக்கு திட்டம் குறித்த விளக்கம் அளிக்கப்பட்டது.

தொகை வழங்கப் படும் விதம், ஆய்வு செய்யும் அலுவலர்கள் போன்ற விவரங்கள் மற்றும் பயனாளிகளின் சந்தேகத்திற்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

முகாமில் உதவி செயற்பொறியாளர் ஜெயந்தி, ஆணையாளர் பழனிசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் மணிவண்ணன், மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## கடந்த மூன்று ஆண்டுகளில் செலவினங்கள் அதிகரிப்பில் நகரத்தை விஞ்சியது கிராமம்



*லிஜி பிலிப்*
*மும்பை*

*பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான செலவினங்கள் அதிகரிப்பில், கடந்த 20 ஆண்டுகளுக்கு பிறகு முதன்முறையாக நகரங்களை விஞ்சியுள்ளது கிராமம்.*

*கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் (2009–10 மற்றும் 2011–12) கிராமங்களில் வசிப்பவர்கள் மேற்கொண்ட செலவினம் ரூ.3.75 லட்சம் கோடி அதிகரித்துள்ள நிலையில் நகரங்களில் இது ரூ.2,99,400 கோடிதான் உயர்ந்துள்ளது. ஆக நகரங்களைக் காட்டிலும் கிராம மக்கள் மேற்கொண்ட செலவினம் 25 சதவீதம் அதிகமாகும்.*

*வேலைவாய்ப்பு*

*மத்திய அரசு கிராமங்களின் வளர்ச்சியை இலக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் வேலைவாய்ப்பு உயர்ந்துள்ளது. இதனால் தனிநபர் செலவிடும் வருவாய் அதிகரித்து கிராமங்களில் பொருள்கள் விற்பனை உயர்ந்து வருகிறது என கிரிசல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ரூபா குத்வா தெரிவித்துள்ளார்.*

*தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிதிட்டம் கிராமங்களின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக திகழ்கிறது. கடந்த 2009–10–ஆம் நிதி ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளில் ஊரக கட்டுமானப் பணிகளில் வேலைவாய்ப்பு 88 சதவீதம் உயர்ந்தது. அதேசமயம் வேளாண் துறையில் பணிபுரிபவர்கள் எண்ணிக்கை 24.90 கோடியிலிருந்து 22.90 கோடியாக குறைந்துள்ளது. தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு வெளியிட்டுள்ள புள்ளிவிவரம் வாயிலாக இது தெரிய வந்துள்ளது. மேலும் அடிப்படை கட்டமைப்பு மற்றும் கட்டுமானத் துறைகளில் பணிபுரிவதற்காக கிராமங்களில் உள்ள இளைஞர்கள் நகரங்களில் குடிபெயர்ந்துள்ளனர். இவர்கள் அனுப்பும் சம்பளத்தாலும் கிராமங்களின் பொருளாதாரம் மேம்பட்டுள்ளது.*

*பீகார், ஒரிசா*

*பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள பீகார் மற்றும் ஒரிசா மாநிலங்களில் கிராம*

*மக்களில் 33 சதவீதத்தின் செல்போன் வைத்துள்ளனர். இது கிராமங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகிறது. கடந்த 2009–10–ஆம் நிதி ஆண்டில் கிராம மக்களில் 42 சதவீதத்தினர் தொலைக்காட்சி பெட்டியை சொந்தமாகக் கொண்டுள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இது 26 சதவீதமாகத்தான் இருந்தது. இதே காலத்தில் இருசக்கர வாகனங்களை சொந்தமாக வைத்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. இது கிராம மக்கள்தொகையில் 14 சதவீதமாகும்.*
*இதுபோன்ற காரணங்களால் நுகர்பொருள் மற்றும் நுகர்வோர் சாதனங்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் கிராமங்களை இலக்காகக் கொண்டு செயல்படுகின்றன.*

## மதிப்பீட்டை விஞ்சி, பருத்தி ஏற்றுமதி 10% உயர வாய்ப்பு

*2011 அக்டோபர் மாதத்தில் தொடங்கிய நடப்பு பருவத்தில், நாட்டின் பருத்தி ஏற்றுமதி முந்தைய மதிப்பீட்டை விட 10 சதவீதம் அதிகரித்து 1.27 கோடி பொதிகளாக அதிகரிக்கும் என அரசு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.*
*இப்பருவத்தில் பருத்தி உற்பத்தி இலக்கு முந்தைய மதிப்பீடான 3.47 கோடி பொதிகளிலிருந்து 3.53 கோடி பொதிகளாக உயர்த்தப்பட்டுள்ளதே ஏற்றுமதி குறித்த மதிப்பீடு அதிகரிப்பிற்கு காரணம் என தெரிய வந்துள்ளது. பருத்தி ஏற்றுமதியில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. இந்தியா இரண்டாவது இடத்தில் இருந்து வருகிறது.*
*பருவமழை பற்றாக்குறையால் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக பருத்தி பயிரிடும் பரப்பளவை கணக்கிடுவதில் இடர்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே, 2012–13–ஆம் ஆண்டிற்கான பருத்தி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி இலக்குகளை மதிப்பீடு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ஜவுளித் துறை ஆணையர் ஏ.பீ.ஜோஷி தெரிவித்துள்ளார்.*

## நறுமண பொருள்கள் ஏற்றுமதியை இரு மடங்காக உயர்த்த திட்டம்

*ஓங்கார் சப்ரே*
*பூனா*
*அடுத்த ஐந்தாண்டுகளில் நாட்டின் நறுமண பொருட்கள் ஏற்றுமதியை இரு மடங்காக அதிகரிக்க இயலும் என நறுமண பொருள் ஏற்றுமதி குழு தலைவரான ஏ. ஜெயதிலக் கூறியுள்ளார். அதற்கு ஏதுவாக நறுமண பொருள் ஏற்றுமதி குறித்த விதிமுறைகளில் காணப்படும் சாதகமற்ற அம்சங்களை நீக்கும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் இந்த இலக்கினை எட்டுவது சுலபம் என அவர் மேலும் கூறியுள்ளார்.*
*நறுமண பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முதலிடத்திலுள்ள இந்தியா, கடந்த ஆண்டில் 200 கோடி டாலர் (ரூ.11,000 கோடி) மதிப்புள்ள நறுமண பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.*
*இருப்பினும், இங்கிருந்து நறுமண பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகள் மாறுபட்ட தரக்கட்டுப்பாட்டு விதிமுறைகளை பின்பற்றி வருவதால், மிகுந்த இடர்பாடுகளை எதிர் கொண்டு வரும் இந்திய நறுமண பொருட்களின் ஏற்றுமதி குறிப்பிடும்படியாக அதிகரிக்க இயலவில்லை என கூறப்படுகிறது.*
*அளவுகோல்*
*நறுமண பொருட்களின் எண்ணெய்ப்பசை, சாம்பல் அளவு, அசுத்தங்கள், கழிவுகள், பூச்சி*

கொல்லி இரசாயணத்தின் அனுமதிக்கப்பட்ட அளவு போன்றவற்றிற்கு வெவ்வேறு நாடுகள் வெவ்வேறு அளவுகோலை பயன்படுத்துகின்றன. இது உலகம் முழுவதும் சீராக இருக்கும்பட்சத்தில் அவற்றை பின்பற்றுவதில் சிரமம் இராது. ஆனால், ஒவ்வொரு நாட்டிற்காகவும் ஒவ்வொரு விதத்தில் இவற்றை பின்பற்றுவது கடினமாக உள்ளது என திலக் மேலும் கூறியுள்ளார். இறக்குமதி நாடுகள் இந்த தரக்கட்டுப்பாட்டு அளவுகளை ஒவ்வொரு நாட்டிற்கு ஒவ்வொரு விதமாகவும் நடைமுறைப்படுத்துகின்றன. எனவே, இந்த ஏற்றத்தாழ்வுகளை களையும் விதத்தில், பல்வேறு நாடுகளை சார்ந்த நறுமண பொருள் கட்டுப்பாட்டு அமைப்புகளையும் அணுகி சர்வதேச அளவில் சீரான விதிமுறைகளை பின்பற்றுமாறு கோர போவதாக இந்திய நறுமண பொருள் வாரியம் தெரிவித்துள்ளது.

## பருவமழை குறைவு, ரூபாய் மதிப்பு சரிவால் சமையல் எண்ணெய் விலை உயர வாய்ப்பு



மாதவி சாலி

அகமதாபாத்

பருவமழை குறைவு, அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சரிவு, அமெரிக்காவின் கடும் வறட்சி போன்ற காரணங்களால் முன்னணி நிறுவனங்களால் தயாரிக்கப்படும் சமையல் எண்ணெய் விலை 15 சதவீதம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணெய் வித்துக்கள்

பார்ச்சூன் பிராண்டு பெயரில் சமையல் எண்ணெய் விற்பனை செய்துவரும் அதானி வில்மார் நிறுவனம் சோயா, சூரியகாந்தி மற்றும் கடுகு எண்ணெய் விலையை லிட்டருக்கு 75 பைசா உயர்த்தியது. செப்டம்பர் மாதம் 15–ந் தேதிக்குள் மேலும் 1.50–2 ரூபாய் வரை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. விலையை உயர்த்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என இந்நிறுவனத்தின் தலைமைச் செயல்அதிகாரி அங்சு மல்லிக் தெரிவித்துள்ளார். தென்மேற்கு பருவமழை குறைந்துள்ளதால் எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு 3.35 சதவீதம் குறைந்து 1.70 கோடி ஹெக்டேராக குறைந்துள்ளது. இந்தியாவில் ஆண்டிற்கு 1.60 கோடி டன் சமையல் எண்ணெய் தேவைப்படுகிறது. இதில் 55 சதவீதம் இறக்குமதி வாயிலாக பூர்த்தி செய்யப்படுகிறது.

பாமாயில்

மொத்த சமையல் எண்ணெய் இறக்குமதியில் பாமாயில் பங்களிப்பு 75 சதவீதமாக உள்ளது. அடுத்தபடியாக சோயா மற்றும் சூரியகாந்தி எண்ணெய் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்நிலையில் கடந்த ஓர் ஆண்டு காலத்தில் அமெரிக்க டாலருக்கு நிகராக இந்திய ரூபாயின் வெளிமதிப்பு 27 சதவீதம் சரிவடைந்துள்ளது. இதனால் இறக்குமதி செலவினம் அதிகரிக்கும்.

அமெரிக்காவில் கடந்த 56 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் அந்நாட்டில் சோயா வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு குறைந்து சோயா எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. இந்திய சமையல் எண்ணெய் விலை சர்வதேச நிலவரங்களைச் சார்ந்துள்ளதால் சமையல் எண்ணெய் விலை உயர்வு தவிர்க்கமுடியாதது என சமையல் எண்ணெய் விற்பனையில் ஈடுபட்டு வரும் கார்கில் இந்தியா நிறுவனத்தின் தலைவர் சிராஜ் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

ருசி கோல்டு, நியூட்ரிலா, சன்ரிச் மற்றும் மஹாகோஷ் பிராண்டு சமையல் எண்ணெய் விலையை லிட்டருக்கு ரூ.1 அல்லது ரூ.2 உயர்த்தப் போவதாக ருசி சோயா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் தினேஷ் சஹ்ரா தெரிவித்துள்ளார்.

அதேசமயம், வெளிநாட்டு முன்பேர வர்த்தக சந்தைகளில் பாமாயில் போன்றவற்றின் விலை குறைந்துள்ளது. சமையல் எண்ணெய் கையிருப்பு போதுமான அளவிற்கு உள்ளதால் விலை உயர வாய்ப்பில்லை என சில நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

**நீலகிரியில் பருவமழை பொய்த்ததால்**

# ஊட்டி டைகர்ஹில் அணை வறண்டது

ஊட்டி, ஆக.30–

நீலகிரியில் இந்த ஆண்டு பருவமழை பொய்த்து போனதால் ஊட்டி டைகர்ஹில் அணை வறண்டு காணப்படுகிறது.

### ஏமாற்றிய பருவ மழை

நீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு தென் மேற்கு பருவ மழை எதிர்பார்த்த அளவு பெய்ய வில்லை. அவ்வப்போது லேசான தூறல் மழையுடன் தென் மேற்கு பருவமழை பெய்து விட்டு நின்று விட்டது. இதனால் மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகள் வறண்டு காணப்படு கின்றன.

மழை பொய்த்து போனதால் மாவட்டத்தில் உள்ள அணைகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. இதனால் மின் உற்பத்தியும் பாதிக்கப்பட்டு உள்ளது. மேலும் நீலகிரி மாவட் டத்தில் மழை வேண்டி ஆங்காங்கே மக்கள் சிறப்பு பூஜைகளும் செய்து வருகிறார்கள்.

### டைகர்ஹில் அணை

ஊட்டி நகராட்சி மக்களுக்கு பார்சன்ஸ் வேலி அணை, மார்லி மந்து அணை, கோரிசோலா, டைகர்ஹில் உள்ளிட்ட அணைகளில் இருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதில் டைகர் அணை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த டைகர் ஹில் அணைப் பகுதியில் போதிய மழை இல்லாத காரணத்தால் அணையில் நீர்மட்டம் குறைந்து வருகிறது. ஊட்டியில் கடந்த சில நாட்களாக சாரல் மழை பெய்து வருகிறது. இருந்த போதிலும் டைகர் ஹில் அணை வறண்டு காணப்படுகிறது.

### குடிநீர் தட்டுப்பாடு

இந்த அணையில் இருந்து தான் ஓல்டு ஊட்டி, ஜெயில் ஹில், பாம்பேகேசில், தலையாட்டு மந்து, நொண்டி மேடு உள்ளிட்ட பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஆனால் தற்போது அணையில் போதிய தண்ணீர் இருப்பு இல்லாத தால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது.

தென்மேற்கு பருவமழை கைவிட்ட நிலையில் வடகிழக்கு பருவமழை நீலகிரி மாவட்டத்தில் பெய்தால் மட்டுமே அணைகளில் தண்ணீர் நிரம்ப வழி ஏற்படும். வட கிழக்கு பருவமழையும் ஏமாற்றி விட்டால் அணைகளில் தண்ணீர் வறண்டு, கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் என்று நகராட்சி அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.



ஊட்டி டைகர்ஹில் அணை தண்ணீர் இன்றி குட்டைபோல் வறண்டு காணப்படுவதை படத்தில் காணலாம்.